# சகல வங்கிகளும் தேச உடைமையாகும்?


istered as a News Papar in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 2
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் மாசி 1 துல்ஹஜ் 5 வியாழக்கிழமை [12-2-70]


## இந்திரா மந்திரிசபை இன்று கூடுகின்றது

புதுடில்லி, பெப் 11
பாரதத்தில் 11 வங்கிகள் தேச உடைமையாக்கப்பட்டது செல்லுபடியாகாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்மானித்திருப்பதின் காரணமாக இந்தியாவிலுள்ள வெளிநாட்டு வங்கிகள் உட்பட சகல வங்கிகளையும் தேச உடைமையாக்குவது பற்றி திருமதி இந்திரா காந்தியின் அரசாங்கம் ஆலோசிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

வெளிநாட்டு வங்கி உட்பட இதர வங்கிகளையாவையும் விடுத்து 14 வங்கிகளை மாத்திரம் தேச உடைமையாக்கியது பாரபட்சமான நடவடிக்கை யென்றும் இதனுல் இந்த வங்கிகளை தேசஉடைமையாக்கியது சம்பந்தமான சட்டத்தின் சகல அம்சங்களும் செல்லுபடியாகாதென வும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

இந்தத் தீர்ப்பு பற்றி மத்திய மந்திரிசபை நாளைய தினம் கூடி ஆலோசிக்கும் என்று தெரிகின்றது. நாளையதினம் மந்திரிசபையில் நாட்டிலுள்ள சகல வங்கிகளையும் தேச உடைமையாக்கிவிடுவது பற்றி ஆலோசிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புபற்றி தலைவர்கள் பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். 14 வங்கிகளை தேச உடைமையாக்குவதற்கு ஆதரவளித்ததி. மு. க. கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் சகல வங்கிகளும் தேச உடைமையாக்கப்படுவதை ஆதரிப்பதாத் தெரிகின்றது. ஆனுல் வெளிநாட்டு வங்கிகள் தேசஉடைமையாக்கப்படலாம் என்று சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள்.

மத்திய மந்திரிசபையின் நிலைமைபற்றி எதுவித தகவலும் இன்னும் வெளிவரவில்லை. என்றாலும் சுப்ரீம் கோட்டின் தீர்ப்பு மந்திரிசபைக்கு பெரிய அதிர்ச்சியைக்கொடுத் திருப்பதாகக் கருதப்படுகின்றது.

## வடக்கில் 150 மேல் காலி இடங்கள் உண்டு

# '7 ஆண்டுபூர்த்தியானவர்களை சொந்த இடங்களுக்குமாற்றுக!'

## அ. இ. தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, புதன்
வடபிரதேசத்தில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர் பதவிகள் காலியாக இருப்பதால் 1963-ம் ஆண்டு ஏழாம் மாதம் முதல் திகதி மாற்றப்பட்டவர்கள் உட்பட ஏழு ஆண்டுச் சேவையைப் பூர்த்தி செய்து மாற்றங் கோரிய ஆசிரியர்களைச் சொந்த மாகாணத்திற்கு இடமாற்றம்செய்யும்படி கல்வி அதமச்சின் உதவி நிரந்தரக் காரியதரிசி திரு. சிறில் கமகேயைப் பேட்டிகண்ட அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தூதுக்குழு கேட்டுக் கொண்டது.

இத்தூதுக்குழுவில் தலைவர் திரு. இ. கந்தையா, செயலாவர் திரு. க. இ. குமாரசாமி, பண்டிதர் ச. பொன்னுத்துரை, திரு. வ. நடராசா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இத்தூதுக் குழு பின்வரும் [illegible] கவனித்து இயன்றவரை நிவாரணம் அளிப்பதாக உதவி நிரந்தரக் காரியதரிசி தெரிவித்தார்.

1-1-70-ல் 8-ம் வகுப்பு தொடக்கம் 10-ம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளை சில பாடசாலைகளில் நீக்கி [illegible] தெரிவிக்கப்பட்டது, கல்விப் புனரமைப்புப் பகுதியினரின் கவனத்துக்கு இவ்விடயம் விடப்படும் என உதவி நிரந்தரக்காரியதரிசி கூறினார்.

மேலும் வருடாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

## அஸ்கிரியதேரோவுக்கு 15நாள்ராஜமரியாதை

கோட்டை, செவ்வாய்
நேற்று முன்தினம் காலமான அஸ்கிரியாபீட மகாநாயக்கதேரோ வண உடுகம சிறிபுத்தரகித்த இரத்மபால மகாநாயக்காவின் பூதவுடல் 15 நாட்களுக்கு இராஜாங்க மரியாதையுடன் வைக்கப்படும் அவரதுஇறுதி மரியாதைதினத்தன்று அரை நாள் பொதுவிடுதலை அளிக்கப்படும்.

இந்தத் தகவலை உள்நாட்டமைச்சு இன்று வெளியிட்டது இதுபற்றிய விபரமான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி பி ஏ)

## கிராமசேவகர், மனைவி பிள்ளைகள் முழுகுடும்பம் தற்கொலை

## சட்டத்தை மாற்றி அமைக்க அரசியல் தலைவர்கள் வற்புறுத்தல்

வங்கிகளை தேச உடமையாக்கியது செல்லுபடியாகாதென இந்திய சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாக பல அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக தேவையானபடி அரசியல் சட்டம் உடனடியாகத் திருத்தி அமைக்கவேண்டும் என்றும், மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தி. மு. க. தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி மத்திய அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி, திரு. நம்பூதிரிபாத், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி ஆகியோடும் அரசியல் சாசனத்தை உடனடியாக திருத்தி அமைக்கவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

சட்டம் மாற்றி அமைப்பதற்கு தங்களது ஆதரவு தரப்படும் என்றும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வருத்தத்தைத் தருவதாகவும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

பாரத கம்யூனிஸ்ட்கட்சி தெரிவித்துள்ள கருத்தில், சுப்ரீம் கோர்ட் வழங்கியுள்ள தீர்ப்புநிலைக்குமாறுல் நஷ்டஈடின்றி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மத்திய அரசுக்கோ அல்லது ராஜ்ய அரசுக்கே உள்ள அதிகாரம் அசாத்தியமாகிவிடும் எனக் கூறியுள்ளது.

## கார்விபத்தில் சிக்கியவர்

யாழ்ப்பாணம், வியா.
யாழ்ப்பாணம் தபால் நிலையத்திற்கு முன்னல் நடந்த கார்விபத்தில் சிக்கிய வடிவேலு என்ற நபர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தெல்லிப்பளையைச் சேர்ந்த இந்நபர் சயிக்கிளில் வந்தபோது இவ்விபத்து நடந்தது.

—

## 66,132 பேர்

## பல்கலைக்கழக கமிஷன் நாளை யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், வியாழன்
பல்கலைக்கழகக் கமிஷன் உறுப்பினர்கள் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்கள். திரு ஜி. பி. மலலசேகரா தலைமையிலான இக்கமிஷன் திருக்கோணமலை, மட்டக்களப்புக்கும் செல்லவிருக்கிறது.

யாழ்ப்பாண அரசாங்கச் செயலக மண்டபத்தில் பல் [illegible] வடுகிறது. வட மாகாணக் கல்லூரி அதிபர்கள் சங்கம், யாழ். பெற்றோர் சங்கம், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் வடபகுதியிலுள்ள பல ஸ்தாபனங்கள், தனி நபர்கள் இங்கு சாட்சியமளிப்பார்கள்.

இப்பாதம் 14ந் தேதி முதல் 17ந் தேதி வரை தொடர்ந்து விசாரணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமசேவகர்; மனைவி பிள்ளைகள்

# முழுகுடும்பம் தற்கொலை

கொழும்பு, செவ்.

கிராமசேவகர் ஒருவரும் அவரது மனைவியும், இரு பெண்பிள்ளைகளும் கிருமி நாசினி அருந்தி மரணமானார்கள்.

இப்பரிதாப சம்பவம் குருநாகல் மாவட்டத்தில் உள்ள மாவத்தகமவில் நடைபெற்றுள்ளது. இக் கிராமசேவகரால் கிருமி கொடுக்கப்பட்ட அவரது 8 வயதுக் குழந்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும், அதன் நிலைமையும் கவலைக்கிடமாகவுள்ளதாகவும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி. பி. ஏ)

# துறைமுகத் தொழிலாளர் வேலைக்குத் திரும்ப முடிவு

கொழும்பு, செவ்

துறைமுகக் கூட்டுஸ்தாபனத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைநிறுத்தம் முடிவடையும் அறிகுறிகள் தென்படுகின்றன. இன்னும் ஓரிரு தினங்களில் வேலைநிறுத்தம் முடிவடையக்கூடும் என தொழிற்சங்கத்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இன்று கொழும்பில் வர்த்தக ஊழியர் சங்கமும், தொழிற்சங்க கூட்டு முன்னணியும்வேலைநிறுத்தத்தை நிறுத்துவது சம்பந்தமாக இவ்விரு தொழிற்சங்கங்கள்கூடி ஆராயவிருக்கிறது.

கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே வேலைநிறுத்தக்காரர் வேலைக்குதிரும்பமுடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

6000க்கும் அதிகமான ஊழியர்கள் தற்போது வேலைநிறுத்தம் செய்துவருவதாக தொழிற்சங்கங்கள் கூறும் அதே வேளையில் 600க்கும் குறைவானவர்களே வேலையைப் பகிஷ்கரிப்பதாக அரசாங்கம் கூறுகிறது.

கொழும்பு, காலி, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களில் நடைபெற்றுவரும் இந்த வேலைநிறுத்தத்தில் துறைமுகவேலைகள் ஸ்தம்பிக்காதவாறு இராணுவ, கடற்படை வீரர்கள் துறைமுகங்களில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

— —

## ''யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்''

மாவிட்டபுரம், செவ்

திரு. ந. சிவநேசன் (எம். எஸ். ஸி. பொருளாதாரம்) இம்மாதம் 17ந் திகதி சுன்னாகம் பட்டினசபையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் 'யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்' என்னும் விடயமாக ஆய்வுரை வழங்குவார்.

## மகாவலிதிட்டத்தின்

# முதற் பகுதி வேலையால் முதலில்திருமலைக்குநன்மை

கோட்டை, புதன்

வடமத்திய வரண்ட பிரதேசமே மகாவலி திருப்புத் திட்டத்தின் ஆரம்பவேலையால் பயனடையும் முதற் பகுதியாகும். இம்மாதம் 28-ம் திகதி இந்த திட்டத்தின் முதல் பகுதி வேலை ஆரம்பமாகிறது.

இம்முதல் ஆரம்பவேலைக்கு உலக வங்கியும் சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனமும் சேர்ந்து பதினேழரைக் கோடிரூபா கடன் வழங்குகிறது.

மகாவலி திருப்புத் திட்டத்தின் ஆரம்ப வேலை பூர்த்தியானதும் தற்போதுள்ள 102,000 ஏக்கர் நிலப்பகுதியும் புதிய 84,000 ஏக்கர் நிலப்பகுதியும் நெற்செய்கையின்கீழ் கொண்டுவரப்படும் திருகோணமலை மாவட்டத்தின் ஒருபகுதியும் இந்நிலப்பரப்புக்குள் உள்ளது. குடியேற்றப்படும் 15,000 குடும்பங்களில் 1000 குடும்பங்கள் திருகோணமலைப்பகுதியில் இருந்து குடியேறுபவர். பொல்கொல்லையில் மின்சார உற்பத்தியும் முதல் ஆரம்பத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

1973-ம் ஆண்டு மகாவலி திருப்புத் திட்டத்தின் இம்முதல் வேலை பூர்த்தியாகும் என காணி நீர்ப்பாசன அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சி. பி. ஏ)

செயலாளர் திரு. க. இ. குமாரசாமி, பண்டிதர் ச. பொன்னுத்துரை, திரு. வ. நடராசா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இத்தூதுக் குழு பின்வரும் விடயங்களையும் கேட்டுக் கொண்டது.

ஏழு ஆண்டுகளுக்கு மேலாக வெளியிடங்களில் சேவைசெய்த மாற்றங்கேட்டுள்ள தலைமையாசிரியர்களையும் சொந்த மாகாணத்திற்கு மாற்ற வேண்டும். வயது கூடியவர்களுக்கு மாற்றத்தில் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

பயிற்சிக்கலாசாலைக்குச் சென்றதனாலும் இளைப்பாறியவர்களாலும் சராசரி கூடியதனாலும் பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் காலிஇடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டும்.

காலியாகவுள்ள தலைமையாசிரியர் அதிபர் பதவிகளைத் தாமதமின்றி நிரப்புதல்வேண்டும். அதிபர் நியமனத்தின் போது கணிசமான அளவு சுயபாஷா ஆசிரியர்களுக்கென கட்டாயம் ஒதுக்கவேண்டும். பதவி உயர்வுகள் வழங்கப்படும் அட்டவணைஒழுங்கின்படியே மேலும் ஆறு மாதமளவில் ஏற்படும் காலியாகும் தலைமையாசிரியர் இடங்களையும் நிரப்பவேண்டும்.

தலைமையாசிரியர், அதிபர் பதவி உயர்வுகளுக்கு முதலாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட காலத்திலிருந்த சேவை மூப்புக்கு முதலிடம் வழங்குதல் மிக அவசியமாகும்.

ஓர் ஆசிரியர் மாத்திரமுள்ள பாடசாலையில் லீவு எடுக்கும் காலத்தில் அவருக்கு ஏற்படும் கஷ்டத்தைச் சுட்டிக்காட்டிய பொழுது மேலும் ஓர் ஆசிரியரை அத்தகைய இடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கலாமென உதவி நிரந்தரக் காரியதரிசி கூறினார்.

வெளிமாகாணத்திலிருந்து சொந்த மாகாணத்துக்குச் செல்வதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் பற்றியும், சொந்த மாகாணத்திலிருந்து வெளிமாகாணத்திற்கு மாற்றப்பட்டுச் செல்ல முடியபதபடி ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் பற்றியும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கு விண்ணப்பித்த விண்ணப்பங்கள் தனித்தனி பரிசீலிக்கப்பட்டன. அவற்றை அனுதாபத்துடன் உதவி நிரந்தரக் காரியதரிசி தெரிவித்தார்.

1-1-70-ல் 8-ம் வகுப்பு தொடக்கம் 10-ம் வகுப்பு வரை உள்ளவகுப்புகளை சில பாடசாலைகளில் நீக்கிவிடும்படி கல்விப் பகுதி விடுத்த சுற்று அறிக்கையால் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது தூரத்திலுள்ள மகாவித்தியாலயத்துக்குச் செல்ல வசதியற்ற நிலையில் அவர்கள் பாடசாலைப் படிப்பை அடியோடு இழக்கும் நிலைமை துரதிர்ஷ்டமானதுஎன மேலும் ...யினரின் கவனத்துக்கு இவ்விடயம் விடப்படும் என உதவி நிரந்தரக்காரியதரிசி கூறினார்.

மேலும் வருடாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல பிரேரணைகள் பற்றியும் தூதுக்குழுவினர் உதவி நிரந்தரக் காரியதரிசியிடம் கலந்துரையாடினர்.

இலங்கை முழுவதும் ஏற்படும் ஆசிரியர் காலிஇடங்களைக் கணக்கிட்டு அவற்றைப் படிப்படியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக உதவி நிரந்தரக்காரியதரிசி தூதுக் குழுவுக்குத் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண தமிழருக்கு சரணடையமாட்டோம்

## இரத்தினபுரியில் ஆர். ஜி.

இரத்தினபுரி, புதன்

நாங்கள் என்றும், இந்தியருக்கோ அல்லது யாழ்ப்பாண தமிழருக்கோ சரணடைய மாட்டோம். இந் நாட்டில் வாழும் சிங்கள மக்கள் 2500 வருடகாலமாக எந்த இடத்திலும் சரி என்றுமே சரணடைந்தது கிடையாது.

இரத்தினபுரியில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் சிங்கள மகஜன பெரமுன தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசும் போது கூறினார்.

திரு. சேனநாயக்கா மேலும் கூறியதாவது: கூட்டரசாங்கமும், யூ. என். பி. அரசாங்கமும் தமிழர்களுக்கு கூடிய சலுகை வழங்கி வந்துள்ளனர். தமிழர்களின் உதவியில்லாமல் இவ்விரு அரசாங்கங்களும் பதவிக்கு வர முடியவில்லை, இதன் மூலம் சிங்கள மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டன.

தோட்டப் பகுதியில் நடந்த வேலைநிறுத்தம், சிங்கள மக்களுக்கு எதிரான இயக்கமே. இந்திய தொழிலாளிக்கு மட்டுமே தோட்டப் பகுதியில் வேலை வழங்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கையாகும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வேலை வழங்குவதற்கு பதிவு செய்யவேண்டுமென்பது மற்றொரு கோரிக்கையாகும்.

சுதந்திரக் கட்சியோ, யூ. என். பி. கட்சியோ தமிழர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைக்கமாட்டார்கள். ஏனெனில் இவ்விரு கட்சிகளும் தமிழர்களின் ஆதரவை எதிர்பார்த்திருக்கின்றன.

சிங்கள மக்கள் மத்தியில் பஞ்சம் தலைகாட்டியுள்ளது. சிங்கள வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டமடைகின்றனர். இதேசமயம் இந்தியத் தமிழர்கள் தோட்டப்பகுதியில் எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமானால் புதிய ஒரு அரசாங்கத்தை சிங்கள மக்கள் நிறுவ வேண்டும்.

நாட்டை ஆளுவதற்கான அரசியல் முறைகள் யூ. என். பி. யிடமோ கிடையாது. இக்கட்சியினர் அதிகார ஆசைக்காக சிங்கள இனத்தையே கைவிட்டுவிட்டார்கள். சிங்கள வாழ்க்கையின் ஒரு பகுதியான பௌத்தத்தையே இவர்கள்மறந்துவிட்டனர்.

... ...

## பால வேலைகள் துரிதம்

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப்படையைச்சேர்ந்த வீரர்களினால் தற்போது பிரதான வீதிகளில் பாலவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விஸ்வமடு 11-ம் கட்டையில் பிரதான வீதிக்குக்குறுக்கே ஒரு பிரமாண்டமான பால வேலையை திரு. ஏ. வலன்டைன்தலைமையில் இயங்கும் வீரர்கள் வெற்றிகரமாக முடித்துக்கொடுத்து பாராட்டப்பட்டுள்ளனர். இதே வீரர்கள் 11ம் கட்டையில் இருக்கும் இன்னொரு பாலத்திற்கும்வேலைசெய்துமுடித்து கொடுத்துள்ளனர். அது மட்டுமல்லாமல் விஸ்வமடு விவசாயப் படையில் அதிகமான வீரர்கள் கட்டிட வேலைகள் செய்து நாளொன்றுக்கு 50 சதம் கூடுதலாகப் பெற்றுவருகின்றனர்.

...சேர்ந்த இந்நபர் சயிக்கிளில் வந்தபோது இவ்விபத்து நடந்தது.

— —

## 66,132 பேர் இந்திய பிரஜையாகினர்

கோட்டை, புதன்

இந்த ஆண்டு ஜனவரி 31ம் திகதிவரை சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் 66,132 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஒப்பந்தத்தின்படி 60,441 பேர் அடங்குவர், 5691 பேர் 'இயற்கையாகப்' பெருகியவர்கள் இவர்களில் 1969 டிசம்பர் இறுதிவரை 13,243 பேர் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர். 1964 அக்டோபர் 30ம் திகதியிலிருந்து 1969 டிசம்பர்இறுதிவரை 29,296 பேர் இந்தியா திரும்பியுள்ளனர்.

— —

## 250 மாணவர்க்கு இரு ஆசிரியர்கள்

பதுளை, புதன்

பதுளை திசபுர கனிஷ்ட வித்தியாலயத்தில் இரு ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். சமீபத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் திறந்துவைக்கப்பட்ட இவ்வித்தியாலத்தில் 250 மாணவர்கள் சல்வி பயில்கின்றனர்.

இந்த மாணவர்களுக்கு அதிபரும் ஒரு உதவியாசிரியரும் மட்டுமே கல்வி கற்பிக்கிறார்கள்எனவும்மேலும் ஆகக்குறைந்தது 5 ஆசிரியர்களாவது நியமிக்கப்படவேண்டுமெனவும் மாணவர்களின் பெற்றோர்கள் கோரியுள்ளனர்.

— —

## 'காரைநகரை பிரிக்காதீர்'

கொழும்பு, புதன்

''காரைநகர் கிராம சபையை இரண்டாகப் பிரிப்பதையோ அல்லது ஒரு பகுதியை நகரசபையாக்கி, மறு பகுதியைக் கிராம சபையாக்குவதையோ நாம் வன்மையாக எதிர்க்கிறோம்'' என வடபகுதி ஆணையாளர் குழுவுக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் 'கொழும்பு காரை அபிவிருத்திச் சபை' கூறியுள்ளது.

காரைநகரின் முன்னேற்றம், ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டு, இப் பிரித்தாளும் கொள்கை இடம்பெற அனுமதியோம் எனவும் இச்சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் திரு. க. க. சுப்பிரமணியம் கூறினார்.

சேகரா தலைமையிலான இக் கமிஷன் திருக்கோணமலை, மட்டக்களப்புக்கும் செல்லவிருக்கிறது.

யாழ்ப்பாண அரசாங்கச் செயலக மண்டபத்தில் பல்கலைக்கழகக் கமிஷன் இம் மாதம் 14ந் தேதி விசாரணையை ஆரம்பிக்கும்.

சுமார் 80 பேர்களுக்கு மேல் யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிப்பார்களெனத் தெரியவருகிறது.

தமிழரசுக்கட்சி ஏற்கனவே இரு தடவைகள் கொழும்பில் சாட்சியமளித்துள்ளன. தமிழ்க் காங்கிரஸ்கட்சியும் கொழும்பில் ஒருதடவை சாட்சியமளித்துள்ளது. இரண்டாவதுமுறை தமிழ்க் காங்கிரஸ் கொழும்பில் சாட்சியமளிக்கவிருந்த தேதி பின்போடப்பட்டிருப்பதால் தமிழ்க் காங்கிரஸ் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கமும், வழக்கறிஞர்களில் ஒரு பகுதியினரும் இரு பிரிவாகச் சாட்சியமளிப்பார்களெனத் தெரியவுள்ள பல ஸ்தாபனங்கள், தனி நபர்கள் இங்கு சாட்சியமளிப்பார்கள்.

இம்மாதம் 14ந் தேதி முதல 17ந் தேதி வரை தொடர்ந்து விசாரணை நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கவிருப்பவர்களுக்கான தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக் கல்வி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், பல்கலைக்கழகக் கமிஷனின் விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கேற்ற இடங்களெனக் கூறப்படும் கல்லூரிகளையும் கமிஷன் நேரில் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய உயர் கல்விச்சபையின் ஒரு பிரிவான இக்குழு வடக்கிலோ அல்லது கிழக்கிலோ பல்கலைக்கழகம் நிறுவுவதென்பது பற்றித் தீர்மானிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

# வகுப்புகளை மாணவர்கள் பகிஷ்கரித்தனர்

சித்தன்கேணி, புதன்

தமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இரு ஆசிரியர்களின் இடமாற்றத்தை ரத்துசெய்து மீண்டும் அவர்களைக் கல்விபோதிக்க அனுமதிக்கும்படிகோரி இன்று காலையில் நவாலி மகாவித்தியாலயத்ததை சேர்ந்த மாணவர்கள் பாடசாலை வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

மேற்படி மகாவித்தியால சிரேஷ்ட ஆசிரியர்கள் திரு. எஸ். ஆறுமுகம் கடந்தமாதத்திலிருந்தும், திரு. எஸ். திஸவீரசிங்கம் இம்மாதத்திலிருந்தும் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நியாயமற்ற இடமாற்றத்தை எதிர்த்து அவர்களைப் பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்பிக்க விடும்படி இன்று காலை மாணவர்கள் பாடசாக்குச் செல்லாமல் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

இந்த இரு ஆசிரியர்களின் நியாயமற்ற இடமாற்றத்தைரத்துச்செய்யஆவன செய்யும்படி மேற்படி மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர்சங்கமும், நவாலிப் பகுதி பொது ஸ்தாபனங்களும் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கதிரவேற்பிள்ளையிடம் கோரியிருக்கின்றனர்.

இதுபற்றி வடபகுதிக் கல்வி அதிபதி திரு. எஸ். தணிகாசலத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

## சிவராத்திரி பஜனைவிழா

யாழ்ப்பாணம், புதன்

மகாசிவராத்திரியின் போது வண்ணைவைத்தீஸ்வரன் கோவிலில் வடமாநில பஜனைசம்மேளனத்தின் பஜனைவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இவ்விழாவில் சகல பஜனைக்குழுவினரையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி சம்மேளனக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## புதிய பொறுப்பதிகாரி

விஸ்வமடு, புதன்

ஒட்டுசுட்டான் விவசாயப் படை முகாமில் கடமையாற்றியபொழுது தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு திரும்பவும் வேலைக்கழைக்கப்பட்ட உத்தியோகத்தரான திரு. கணேஷ் விஸ்வமடு விவசாயப்படை முகாமிற்கு 10-ம் திகதியில் இருந்து மாற்றப்பட்டுள்ளார். இவர் இங்கு முகாம் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய மின்சார ஜேர்மன் கூட்டல் மெஷின் (Adding Machine) விற்பனைக்குண்டு. தேவையானோர் நேரில் வரவும். நாகராஜன். 2, முதலாவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1843

ராசாவின் தோட்டத்தில் நாவலர்ரோட் சந்தியில் முன் பக்கம் பாதை வசதியுள்ள இடத்தில் பனந்தோப்புடனும் கிணற்றுடனும் கூடிய ஐந்தரைப்பரப்புக்காணிஉடனடியாக விற்பனைகருண்டு தொடர்புகொள்ளவும் 60, புங்கங்குளம்வீதி, தபால் பெட்டி இல. 47, யாழ்ப்பாணம், 1846

## தேவை

பேக்கரித் தொழிலில்அனுபவம் வாய்ந்த பேக்கர் தேவை. சம்பளம் எல்லாம் உட்பட 125/- ரூபாகொடுக்கப்படும். அத்துடன் 20 வயதுக்குட்பட்ட ஒரு பையனும் தேவை. எல்லா விபரங்களுக்கும் உரிமையாளர், தாஸன் பேக்ஹவுஸ், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 1845

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் எனது 'கொண்டக்டர் லைசென்சும், அடையாள அட்டையும்' தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நா. கனகலிங்கம், 3/1 பாரதிலேன், கச்சேரி நல்லூர் ரோட். யாழ்ப்பாணம். 1841

## நகரசபை, பருத்தித்துறை கேள்வி அறிவித்தல்

, 25-1-70 & 26-1-70ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகிய மேற்படி விளம்பரத்தின் பிரகாரம் அறியத்தருவது

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதியும் கேள்விகள் ஏற்கும் முடிவு திகதியும் முறையே 15-2.70ம் திகதி பி. ப. 3 மணிவரையும் 20-2-70ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

வ தர்மலிங்கம்,
தலைவர்,
நகரசபை, பருத்தித்துறை.
1949

## திருட்டு

மாவிட்டபுரம், புதன்

மோட்டார் வானில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்ணின் சங்கிலியும் மணிக்கூடும் இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நா. இராசதுரையும் அவரது மனைவியும் சுதுமலைக்குச் சென்றுபின் வீடு திரும்புவதற்காக தாவடியில் மோட்டார் வானில் ஏறி வந்துகொண்டிருக்கும்போது மனைவி அணிந்திருந்த 600 ரூபா பெறுமதியான கல்பதிக்கப்பட்ட மணிக்கூடும், சங்கிலியும் களவாடப்பட்டு விட்டதாக பிரஸ்தாப நபர் காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதுபற்றி காங்கேசன் துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.


வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ஜெமினி — சாவித்திரி
நடித்த
ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்
4-00 p.m. Only
HELICOPTER SPIES

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9 30
பிறிப்போயா, போயா 2-30 மணி
ஜெமினி — ராகினி
நடித்த
ஏழைப்பங்காளன்

Now Showing (Today only)
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Kerwin Mathews
in
THE VISCOUNT
(color/scope)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Jim Brown, Diahann Carroll


# இன்றைய பலன்

மாசிமாதம் 31-ம் திகதி [12-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அமைதி நன்று.

**ரிஷபம்**- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள்வரவும் நல்லதினம்.

**மிதுனம்**- இருள் மண்டிக் கிடக்கும்- இன்று ஏமாற்றம்தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

**கடகம்**- கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

**சிம்மம்**- புத்திரவழியால் புகழும் உண்டு, புதிய பாதையில் தடைபோடுவீர்கள். நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். குடும்பத்திலும் பிணைப்புகள் பலப்படும். பொதுவாக நல்லதினம்.

**கன்னி**- தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும். தனிவழியை நாடுவீர். அமைதியும் பறக்கும்.

**துலாம்**- குடும்பவழியால்மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும் காதல்விவகாரங்களுக்கு இடம்உண்டு. சிறப்பானதினம்.

**விருச்சிகம்**- கழுகுப்பார்வை வட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளநேரிடலாம். முடிந்தவரையில் வழக்கு விவகாரங்களை இன்று தயிர்த்துக்கொள்ளவும்.

**தனுசு**- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்- பெற்ரோர்களாயின் ஆதரவும் கிடைக்கும் தொழில்துறையிலும் வெற்றிஉண்டு.

**மகரம்**- பொறியியலாளருக்குப் பொன்னுனதினம். புகழும், பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு. பொதுவாகத்தொழிலில் வெற்றிஉண்டு.

**கும்பம்**- நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்ருடலில் மதிப்பு உயரும். பெரிய மனிதர்களின் ஆதரவும் பெருகும்.

**மீனம்**- எவ்விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும். ஆணவப்போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும், முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியா. 12—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை: 7-45 பகல்12-03, 1-00, இரவு: 10-00

மாலை: 6-15 நாட்டுப் பாடல்கள், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம்.

உரும்பராய்

## இந்து இளைஞர் மன்றம்

## இளந்தமிழர் மன்ற நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தின் புதுவருட் நிர்வாகிகள் தெரிவு மன்றப் பணியகத்தில் கனகமகேந்திரா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. கனகமகேந்திரா மீண்டும் தெரிவு) உபதலைவர் வ சத்தியநாதன், செயலாளர் மா. நாகேந்திரன், உபசெயலாளர் பொ. சதானந்தன், பொருளாளர் சி. இலிங்கவேலாயுதம், உபபொருளாளர் - வ. பாலச்சந்திரன், நாடகத்துறை செயலாளர் நா. கருணனந்தசிவம், உபநாடகத் துறை செயலாளர் ப. விக்னேஸ்வரன், விளையாட்டுத் துறைசெயலாளர்சி. பிரான்

கிரிக்கெட்

## யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம், வியா

யாழ். இந்துக் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி ஆட்ட இறுதியில் மிக நிதானமாய் துடுப்பெடுத்தாடி 6 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 108 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். ஏ. யோசப் 35 ஓட்டங்களையும், சந்திரசேகர் 17 ஓட்டங்களையும் பெற்றனர். வி. விக்னேஸ்வரன் 4 விக்கெட்டுகளையும் எஸ். விபுலானந்தன் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

யாழ். இந்து முதல் இன்னிங்ஸில் 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. எஸ். ஏ. யோசப் 3 விக்கெட்டுகளையும், கே. ஜி. குணேந்திரன் 3 விக்கெட்டுகளையும், ஜே. அருளானந்தன் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் விக்கெட்டுகளை மளமளவென இழந்து மொத்தம் 58 ஓட்டங்களைப் பெற்றது. விக்னேஸ்வரன் 5 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்.

யாழ். இந்து 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்தபோது 98 ஓட்டங்களை எடுத்தால் இப்போட்டியில் வெற்றி பெறலாம் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த இவர்கள் 14 ஓட்டங்களைப் பெற்றபோது மூன்று விக்கெட்டுகளை இழந்து விட்டனர். இதன்பின் துடுப்பெடுத்தாடிய சற்குணசீலன் சிறப்பாகஆடி 40 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்ருர். நகுலேந்திரன் 37 ஓட்டங்களைப் பெற்ருர். இவ்விருவரின் சிறப்பான துடுப்படியால், யாழ். இந்து ஆட்டமுடிவில் 6 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே. நி)

## புத்தூர் வீனஸ் வெற்றி

புத்தூர், புதன்

கோப்பாய்க்காரியாதிகாரி பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி

## பாடசாலை பிரச்னை நடவடிக்கை எடுக்க ஒரு குழு

கொழும்பு, புதன்

பாடசாலைகளில் இடவசதி உபகரணங்கள் இல்லாமை ஆகிய பல பிரச்னைகள்பற்றி காலத்துக்குக்காலம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக கீழ்க்கண்ட ஆட்சிக்குழுவை தமிழர் தேசியசபை நியமித்துள்ளது.

திருவாளர்கள் சி. ரங்கநாதன் கியூ. ஸி, என். கிருஷ்ணதாசன் (ஓய்வு பெற்ற நீதிபதி), பி. நவரட்ணராசா கியூ. ஸி., வீ, கே. கந்தசாமி (ஓய்வுபெற்றமாவட்ட நீதிபதி). எஸ். எம். இராஜதுரை. கே. சி, தங்கராசா, என். சத்தியேந்திரா.

திருவாளர்கள் எம் எஸ். கந்தையா, எம். சண்முகநாதன் ஆகியோர் இணைச் செயலாளர்களாவர்.

## உப சபாநாயகருக்கு நன்றி

பருத்தித்துறை, புதன்

'தேசிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் எமது பகுதிக் கத்தோலிக்க பாடசாலைகள் குறிப்பிடக் கூடியளவு பலவித நன்மைகளையும் பெறுவதற்கு ஆணிவேராக இருந்தவர் எமது பாராளுமன்ற உறுப்பினரும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் மேலும் பலவித நன்மைகளை நாம் பெறவேண்டுமாயின் எமது பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை தொடர்ந்து உழைக்கவேண்டும்.'

இவ்வாறு வதிரி திரு இருதயக்கல்லூரிப் பழைய மாணவர் சங்க விசேட கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. எஸ். பி. தேவசகாயம் கூறிஞர் திரு. அகஸ்தீன் பொன்ராஜன் நன்றி கூறிஞர்.

## "ஜி.ஸி ஈ(உயர்) நீக்க வேண்டாம்"

மாவிட்டபுரம். புதன்

"வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள ஜி. சி ஈ. உயர்தர வகுப்பை நீக்கவேண்டாம்" என கல்வி மாஅதிபரைக் கோரியுள்ளது மயிலிட்டிக் கிராம சபை.

கிராமசபை எல்லைக்குள் உள்ள உயர்தர வகுப்புகள் இம் மகாவித்தியாலயத்தை தரம் குறைப்பதால் இங்குள்ள பிள்ளைகள் 4,5 மைல் தூரத்துக்கப்பால் உள்ள பாடசாலைகளுக்குத் தான் செல்லவேண்டும். இதனுல் மாணவர் பாதிக்கப்படுவார்கள். ஆதலால் மேற்படி வித்தியாலய ஜி சி ஈ உயர்தர வகுப்பை நீக்கவேண்டாம் இப்படி மயிலிட்டி கிராம சபைத்தலைவர் திரு கு தி. இராசதுரை கல்வி மாஅதிபரைக் கோரியுள்ளார்.

## பட்டினசபைக்கு வரும் பல்கலைக்கழக பிரேரணை

மாவிட்டபுரம், புதன்

தமிழ்மக்களுக்கு அருந்தொண்டாற்றிய சேர். பொன் இராமநாதன் பெயரில் யாழப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும்' என்று தேசிய உயர் கல்விச் சபையைக் கோரும் தீர்மானம் ஒன்று காங்கேசன்துறைப் பட்டினசபை மாதாந்தக் கூட்டத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 18-ம் திகதி நிகழும் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்துக்கு 5-ம் வட்டார உறுப்பினர் திரு. வி இரத்தினராசா மேற்கண்ட பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## அவசர வேண்டுகோள்

மண்டைதீவு புதன்


மண்டைதீவிற்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் உள்ள கடலினூடாக முன்னைய அல்லைப்பிட்டிக்கிராம சபையால் அமைக்கப்பட்ட வீதி பலகாலமாகக் கவனிக்கப்படாத நிலையில் பழுதடைந்துள்ளது. வீதியின் மத்தியில் அமைக்கப்பட்டபாலமும் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்பட்டதுடன் வீதியின் அரைப்பாகம் கடலரிப்பினுல் அடித்துச் செல்லப்பட்டது இக்கடலரிப்பின் மூலம் இன்னும் சில மாதங்களில் பாலமும் அடித்துச் செல்லப்படலாம் என்ற அபாயகரமான நிலைதற்பொழுது ஏற்பட்டுள்ளது

இதுபற்றி உடன் நடவக்கை எடுக்குமுகமாக மண்டைதீவு அண்ணு சனசமூக நிலையத்தினர் தீவுப்பகுதி எம் பிக்கு அவரச வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். இந்நிலை காரணமாக இவ்வீதியால் இதுகாலவரையும் நடைபெற்ற போக்குவரத்து தற்பொழுதுமுற்ருகவேதடைப்பட்டுள்ளது,

## பொதுக்கூட்டம்

உடுப்பிட்டி, புதன்

துன்னுலை தெற்கு கிராம முன்னேற்ற சங்க வருடாந்த பொதுக்கூட்டம் கட்டைவேலி ஐக்கிய சங்க மண்டபத்தில் இம்மாதம் 14-ம் திகதி திரு. வே. முத்தையா தலைமையில் நடைபெறும். உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், திரு. கே. எஸ். முத்துவேலு, வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன், திரு ரி. கந்தசாமி, ஜே. தேவசகாயம், வி. தங்கராசா ஆகியோர் உரைநிகழ்த்துவர்.


நீங்கள் நிச்சயம் நம்பலாம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப்ரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Jim Brown, Diahann Carroll
in
THE SPLIT
(adults only)

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
இன்றுமுதல்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1) சிறந்தபடம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்




சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ. வி. எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானா மோகனாம்பாள்
A. P. நாகராஜன்


உரும்பராய்

## இந்து இளைஞர் மன்றம்

உரும்பராய், புதன்

உரும்பராய் இந்து இளைஞர் மன்றத்தின் அமைப்புக் கூட்டம் தற்காலிகத் தலைவர் செல்வன் பா. ஜெயராஜன் தலைமையில் நடைபெற்றது. தலைவராக செல்வன் த. இரங்கநாதனும், காரியதரிசியாக செல்வன் சோ. குகதாசனும் தனாதிகாரியாக செல்வன் பா. ஜயராஜனும் மற்றும் உபதலைவர், உபகாரியதரிசி. உபதனாதிகாரியாக முறையே செல்வன்கள் இ. பகீரதன், த. முகுந்தன், வி. மணிவண்ணன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். அமைப்புச் செயலாளராக செல்வன் சி. தவேந்திரன், இ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும்பத்துபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

செயலாளர் நா. கருணானந்தசிவம், உபநாடகத் துறை செயலாளர் ப. விக்னேஸ்வரன், விளையாட்டுத் துறைசெயலாளர்சி. பிரான்ஸிஸ் உப விளையாட்டுத் துறை செயலாளர் மா. இராசேந்திரசீலன், கணக்காய்வாளர் இ வரதராசா, செ. சண்முகநாதன், நா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

— —

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கோப்பாய், புதன்

அச்சுவேலி சென். திரேசா பாடசாலைத் தலைமையாசிரியர் சங்கைக்குரிய தாயார் மேரி எவரல்டாவின் இடமாற்றம் கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் தலையீட்டால் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்றத்தையொட்டிநடைபெற்ற மாணவிகளின் பாடசாலைப் பகிஷ்கரிப்பும் கைவிடப்பட்டது

புத்தூர், புதன்

கோப்பாய்க்காரியாதிகாரி 'பி' பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி புத்தூர் வீனஸ் கழகத்திற்கும் ஆவரங்கால் பீற்றர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் புத்தூர் வீனஸ் 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

புத்தர்கலட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு எஸ். ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## அப்பலோ வென்றது

தெல்லிப்பழை, புதன்


வசாவிளான் 'அப்பலோ' விளையாட்டுக் கழகத்துக்கும் அளவெட்டி அண்ணா விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் அப்பலோ கழகத்தினர் 1—0 கோல்களால் வெற்றிபெற்றனர். மத்தியஸ்தராக திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினர்.


இன்று குதூகல ஆரம்பம்!

ராஜா [யாழ்ப்பாணம்]
செயின்ஸ்தான் [கொழும்பு]
லிபேர்ட்டி [பதுளை]
தினசரி பிற்பகல். 2-30, 6-30 இரவு 9-45க்கும்
போயா முன்தினம், போயா மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை10-30மணிக்கும்.



★ ரவிச்சந்திரன்
★ ராஜ்ஸ்ரீ
★ வி. கே. ராமசாமி
★ சோ ★ சச்சு
★ மனோரமா
முதலியோர் திறம்பட நடித்த
டில்லிமாப்பிள்ளை
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!




தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமலிலிருந்து அதி துரிதமான, அதி பாதுகாப்பான, அதி உறுதியான நிவாரணம் பெற டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை.

டிஸ்பிரின் அதி துரித நிவாரணமளிக்கிறது

டிஸ்பிரின் கரையக்கூடியதாகையாலும், முற்றுகக் கரைந்து விடுவதாலும், இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிந்து உடனடியாகச் செயலாற்றத் தொடங்குகிறது.
அது விரைவாகச் செறிவதால் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

டிஸ்பிரின் ஒழுங்கான பாவனைக்கு மிகப் பாதுகாப்பானது

ஒழுங்காகப் பாவித்தால், சில மருந்துகள் காலக்கிரமத்தில் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கும்.
ஒழுங்கான பாவனைக்கு, நீங்கள் நம்பக்கூடிய ஒரு மருந்தையே உட்கொள்ள வேண்டும்.
டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு ஒழுங்கான பாவனைக்குப் பாதுகாப்பானது என்று காணப்பட்டுள்ளது. டிஸ்பிரினை நீங்கள் நம்பிக்கையுடன் உட்கொள்ளலாம். சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, டிஸ்பிரின் கரையக்கூடியதாகையால் அது உங்கள் வயிற்றில் அசௌகரியத்தையும், பாதக விளைவுகளையும் உண்டு பண்ணும் அமிலத்துகள்களை விடுவதில்லை.

டிஸ்பிரின் டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகமெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணமளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.

டிஸ்பிரின் தான் நவீன சஞ்சீவி

ஒழுங்கான ஆராய்ச்சியும், தரக்கண்காணிப்பும், டிஸ்பிரினை, தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமலுக்கு நீங்கள் வாங்கக் கூடிய அதி நவீன சஞ்சீவியாக்குகின்றன.

DISPRIN
2 மாத்திரைகளை நீரில் கரைய விட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை. ஆகவே உங்களுக்கு அதி துரிதமான, அதி பாதுகாப்பான, அதி உறுதியான நிவாரணம் வேண்டும் போதெல்லாம் டிஸ்பிரினையே உட்கொள்ளுங்கள்.

ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி
P. 9202


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுக் கொமாண்டோ குழுவினர் விமானப் பிரயாணிகள் மீது கைக்குண்டு வீசினர்

## மூனிச்சில் சம்பவம்

## ஒரு இஸ்ரேலியர் பலி; 12 பேருக்கு காயம்

மூனிச், பெப்ரவரி 11

**ஜெர்மனியிலுள்ள மூனிச் விமானத்தில் விமானப்பிரயாணிகள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் மூன்று அராபியர்களைப் பொலிசார் பிடித்துவைத்திருக்கிறார்கள்.**

**விமானத்தில் ஏறுவதற்காகக் காத்திருந்த பிரயாணிகள் மீது அரபுக் கொமாண்டோ இயக்கமொன்றைச் சேர்ந்தவர்கள் என்று கருதப் படும் இவர்கள் கைக்குண்டுகளை வீசினார்கள். இதனால் பிரயாணி ஒருவர் கொல்லப்பட்டார். 12 பேர் காயமடைந்தனர்.**

இத்தாக்குதல் சம்பவம் தம் ஆட்களின் வேலை என்று அரபுக் கொமாண்டோ இயக்கமொன்று அறிவித்தது. அதேசமயம் வேறு இயக்கங்கள் இது பற்றி ஒன்றும் தெரியாதென்று அறிவித்தன.

மூனிச் விமானநிலையத்தில் பிரயாணத்திற்காகக் காத்திருந்தவர்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார், 12 பேர் காயமடைந்தனர். குண்டு வீசியவர்கள் பொலிசாருடனும் பின்னர் மோதிக்கொண்டனர். ஒரு பொலிஸ்காரர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தை மேற்கு ஜெர்மன் அரசாங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

### போர்முனைக்கு பயம்

போர்முனையில் சண்டையிடுவதற்குப் பயந்து கொண்டு அப்பாவி மக்கள் மீது அரபுக்கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்துகிறார்கள் என்று இச்சம்பவம் பற்றி ஜெருசலத்தில் இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறினார். விமானப் பயணங்களுக்குச் சர்வதேச ரீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டியதை இச்சம்பவம் வலியுறுத்துவதாக டெல் அவிவில் ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.

## ஜோர்டான் அரசு மீது கொமாண்டோக்கள் சீற்றம்

ஜோர்டான் மந்திரி சபை நேற்று எடுத்த ஒரு முடிவு கொமாண்டோ இயக்கங்களின் கோபத்தைக் கிளறி விட்டிருக்கின்றது.

அம்மானில் ஆயுதங்கள் எடுத்துச்செல்வதையும், ஏவடிகுண்டுகள் வைத்திருப்பதையும் தடைசெய்வது என்று நேற்று ஜோர்டான் மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது, மந்திரிசபையின் இக்கூட்டத்தில் மன்னர் ஹுசெயின் சிறிது நேரம் இருந்துவிட்டுச்சென்றார்.

மந்திரிசபையின் இந்த முடிவு பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை ஒடுக்கும் நடவடிக்கையென்று கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

[illegible] கத்தின் தலைவர் திரு அரபாட் மாஸ்கோ போய்ச் சேர்ந்திருக்கிறார். விடுதலை இயக்கத்தினருக்கு ஆயுதங்களும் வேறு உதவிகளும் வழங்கும்படி இவர் சோவியத் யூனியனைக் கோருவார் என்று தெரிகின்றது.

### எதியோப்பியாவில் மார்ஷல் டிட்டோ

யூகோஸ்லாவியாவில் அதிபர் மார்ஷல் டிட்டோ நேற்று அடிசபபாவில் மன்னர் ஹைலிசேலாசியுடன் ஆலோசனைகள் நடத்தினார் அவர்களின் பேச்சில் மேற்காசிய நிலைமையே பெரிதும் இடம்பெறதாகத் தெரிகின்றது.

இன்று அடிசபபா வந்து சேரும் அமெரிக்க ராஜா [illegible]

## ரஷ்ய அதிகாரியை காணவில்லையாம்

புதுடில்லி, பெப் 11

புதுடில்லியிலுள்ள சோவியத் தூதரகத்தின் தகவல் பகுதி அதிகாரி யூரி பாஸ்மினேவ் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரியைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். இவர் இருக்கும் இடத்தை அறிவிப்பவர்களுக்கு 2000 ரூபாய் சன்மானம் அளிக்கப்படும் என்றும் பொலிசார் அறிவித்துள்ளனர். இவர் கடைசியாக ஒரு சினிமா தியேட்டருக்குள் போவதைப் பலர் கண்டதாகத் தெரிகின்றது.

### ஐ. எல். ஓ. தலைவர் ராஜினாமா

ஜெனிவா, பெப் 11

சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார். இந்தப் பதவியில் அவர் 1948ம் ஆண்டு முதல் இருந்து வருகிறார். 1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திரு டேவிட் மோர்ஸ் ஓய்வு பெற வேண்டும். ஆனால் அவர் இவ்வருடம் மே 31-ம் திகதியுடன் ஓய்வுபெறவிருக்கிறார்.

## ஹரிஜன சிறுவனை எரித்துக்கொன்ற வழக்கு

### 3 பேருக்கு ஆயுள் தண்டனை

ஐதராபாத், பெப். 11

ஹரிஜன சிறுவனை உயிரோடு கொழுத்திக் கொன்ற 3 பேர்களுக்கு ஆந்திர உயர்நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்தது.

ஆந்திராவில்உள்ள காஞ்சிகார்செர்லா என்ற இடத்தைச்சேர்ந்த கொடேசு என்ற ஹரிஜன சிறுவன் ஒருவனை பத்திரங்கள் திருட்டுப் போனது தொடர்பாக சிலர் தூணில் கட்டிவைத்து அடித்தார்கள்.

பிறகுஅவனுடையசட்டை துணி.மணிகளில்மண் எண்ணை ஊற்றி தீவைத்துவிட்டார்கள் சிறுவன் உடல் வெந்து பரிதாபமாக பலியானான்.

பொலிசார் இந்த [illegible] சம்பந்தமாக [illegible] ரலு, நரசிங்கராவ், சென்னி மற்றும் 4 பேர்களை [illegible] செய்து வழக்குத்தொடர்ந்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேர்களுக்கு7 ஆண்டுகடுங்காவல் ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது.

கீழ்க்கோட்டுத் தண்டனையை எதிர்த்து 7 பேரும் அப்பீல் செய்தனர். இந்த தண்டனை போதாது என்று அரசாங்கமும், அப்பீல்செய்தது.

ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதிகள் சபரூதின் அகமது, ஏ.டி.வி.ரெட்டி ஆகியோர் வழக்கை விசாரித்து வெங்கடேச வரலு நரசிம்மராவ் சின்னி ஆகிய 3 பேர்களுக்கும் ஆயுள் தண்டனை விதித்தனர். [illegible] 4 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## "தமிழருக்கு மந்திரிப்பதவி கிடைப்பது உரிமைகள் பறிபோக வழியாகும்

### உரும்பராயில் சுயாட்சிக்கழகத் தலைவர்

உரும்பராய், புதன்

"சிங்கள அரசியல் கட்சிகளுடன் இரண்டறக் கலக்கக்கூடிய அங்கத்தவர்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் விரட்டி, நேர்மையான, தியாகஞ்செய்யக் கூடிய, உணர்ச்சி மிக்க புதிய அங்கத்தவர்களை வாக்காளர்கள் வெற்றி பெறச்செய்தால்தான் எமது தமிழினத்தின் விடுதலைப் பணியைச் சிறப்புறத் தொடரமுடியும்."

உரும்பராய் நெசவாலைக் கருகில் நேற்று நடைபெற்ற ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகப் பிரசாரக் கூட்டத்தில் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப் பிரசாரக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

"எமது தமிழினம் தற்போது மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறது. மந்திரிப் பதவிக்காகவும், சில அற்ப உரிமைகளுக்காகவும் எமது தலைவர்கள் ஆசைப்பட்டுத் தமிழ்மக்களைப் பெரும்பான்மையினருக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு மாவட்டசபை எப்படியாவது கிடைத்துவிடுமென்ற அறியாமையில், தமிழ் மக்களுக்கெதிராகப் பார்லிமென்டில் கொண்டுவரும் தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் வாக்களித்துவிட்டு தற்போது மாவட்டசபையும் இல்லாமல் ஒன்றுமில்லாமல் நிற்கிறார்கள்.

தமிழ்மக்களின் எதிர்கால நலனில் தமிழரசுக்கட்சியினர் சிந்திக்கத் தவறிவிட்டனர். இதன் விளைவே தற்போது நாட்டில் ஏற்படவிருக்கும் அடையாள அட்டை மசோதா, ஐந்தரை லட்சம் தோட்டத் தொழிலாளரை நாடு கடத்தல், தமிழ்ப்பகுதிகளில் சிங்களத் திணிப்புப் போன்ற பல காரியங்கள்.

மறைந்த தமிழரசுக்கட்சித் தலைவர்களான வன்னியசிங்கம், வி. ஏ. கந்தையா, ஏகாம்பரம், இராஜவரோதயம் போன்ற தலைவர்கள் கடைசிவரை கடைப்பிடிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் உண்மையான கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வரும் உண்மையான தமிழரசுக்கட்சி எம். பி. நான் ஒருவனே. அடையாள அட்டை மசோதாவால் தமிழர்களுக்கு ஆபத்து உண்டென்று எதிர்த்ததன் விளைவாக நான் தமிழரசுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டேன்."

அரசாங்கத்தில் மந்திரிப் பதவி வகித்து, தமிழ்ப்பிரதேசங்களில் பெரியதொழிற்சாலைகளை நிறுவுவதென்பது வருங்காலத்தில் பெரிய கஷ்டமென்றும் இதற்குக் கடந்த 20 ஆண்டுகால அரசியலே அத்தாட்சியாகுமென்றும், அப்படி மந்திரிப் பதவி கிடைத்தாலும் இப் பதவி மூலம் எமது தமிழ்ச் சமுதாயத்தின் உரிமைகள் மேலும் பறிபோவதற்கே வித்திட்டவர்கள் ஆவோமென்றும் கூறிய திரு. நவரத்தினம், தமிழ்மக்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் எமக்கு எதிராகக் கொண்டுவரப்படும் மசோதாக்கள் என்ன ரூபத்தில் வந்தாலும் எதிர்த்தே தீரவேண்டுமென்றும், இதன் மூலம் எமது விடுதலைவேட்கையைச் சிங்கள மக்கள் புரிந்துகொண்டு அதன்மூலம் ஏதும் பலன் கிடைக்க வழியேற்படலாமென்றும் சொன்னார்.

ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் கோப்பாய்த்தொகுதியில் எதிர் வரும் தேர்தலில் போட்டியிடவிருக்கும் உரும்பராய் பட்டினசபைஉறுப்பினரான திரு. எம். எஸ். கனகசுந்தரமும் பேசினார். மற்றும் திருவாளர்கள் வி. யோகநாதன், பொன்கைவேந்தன், தா. மகேஸ்வரன், சதாசிவம் ஆகியோரும் பேசினர்.

### ஸ்பெயினுக்கு பிரெஞ்சுவிமானம்

பாரிஸ், பெப். 11

ஸ்பெயின் நாட்டுக்கு 30 மிராஜ் சண்டை விமானங்களைக் கொடுக்க பிரான்ஸ் முடிவுசெய்திருக்கின்றன.

### ஆந்திராகாங்கிரஸ் தலைவர் மரணம்

செகுந்தராபாத் பெப். 11

ஆந்திர பிரதேசக் காங்கிரஸ் தலைவர் திரு. குருமூர்த்தி காலமானார். செகுந்தராபாத்தில் இருதய நோயினால் மரணமான அவருக்கு வயது 53.

பத்மஸ்ரீ

### ஜெமினி கணேசனுக்கு பாராட்டு

சென்னை, பெ 11

பத்மஸ்ரீ பட்டம் பெற்ற நடிகர் ஜெமினி கணேசனுக்கு சென்னையில் பாராட்டு [illegible]

## சோவியத் முஸ்லிம்கள் மக்கா யாத்திரை

மாஸ்கோ, பெப். 11

மக்காவுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு 9ம் திகதி பிரயாணமான சோவியத் முஸ்லிம்கள் கோஷ்டிக்கு முவ்டி ஸியாவுடீன் பபாகனேவ் தலைமை வகிக்கிறார். மத்திய ஆசியாவிலும் ஸக்ஸ்தானிலும் வாழும் முஸ்லிம்களின் தலைவர் பபாகனேவ். இவர் மக்காவுக்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்கிறார். இந்த கோஷ்டியில் உள்ள ஏனையோருக்கு இது முதலாவது ஹஜ்ஜி யாத்திரையாகும். இந்தக் கோஷ்டியில் மத குருவானவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், ஊழியர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்கள் உஸ்பெகிஸ்தான், டஜிகிஸ்தான், டோர்க்மேனியா, அஸர்பைஜான் மற்றும் சோவியத் குடியரசுகளைச் சேர்ந்தவர்களாவர்.

புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதை தானும் தனது சகாக்களும் ஆவலுடன் எதிர் பார்ப்பதாக [illegible]

### மே. ஜேர்மனியில் இலங்கைசாராயம்

பொன், பெப். 11

மேற்கு ஜேர்மனியில் நேற்று நடைபெற்ற வர்த்தகப் பொருட்காட்சி ஒன்றில் இலங்கை மாம்பழம், பலாப்பழம், சாராயம் முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்காட்சியில் பல நாடுகளின் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை ஒடுக்கும் நடவடிக்கையென்று கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையால் ஜோர்டானில் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டால் அரசாங்கம்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பேய்ரூட்டில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் பாலஸ்தீனவிடுதலை இயக்கங்கள்யாவும் ஒரு முன்னணியாக இணைந்திருப்பதாகக் கூறியது.

**மாஸ்கோவில் அரபாட்**

பாலஸ்தீன விடுதலை இயக்... இடம் பெறுவதாகத் தெரிகின்றது.

இன்று அடிசபபா வந்து சேரும் அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. ரோஜர்ஸ் மார்ஷல் டிட்டோவைச் சந்திப்பார் என்று தெரிகின்றது.

திரு ரோஜர் டுனிஷியாவில் தமது சுற்றுப்பிரயாத்தைத் முடித்துக் கொண்டு எதியோப்பியாவுக்குப் புறப்பட்டிருக்கிறார்.

அவர்புறப்பட்ட பின்னர் டுனிஷிய பிரதமர் விடுத்த ஓர் அறிக்கையில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதம் கொடுப்பது ஆத்திர மூட்டும் செயல் என்றுகுறிப்பிட்டிருக்கிறார்.

# யு.எஸ். யோசனைகளை எகிப்து ஏற்கும்?

நியுயோர்க், பெப் 1

மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா அண்மையில் தெரிவித்த யோசனைகள் மேலும் ஆராயப் படவேண்டியவையென்றும் அமைதிக்கு இவை அடிப்படையாக அமையலாம் என்றும் அரபுக் குடியரசு கருதுவதாகத் தெரிகின்றது.

இந்த யோசனைகள் இஸ்ரேலுக்குச் சாதகமானவையென்று முன்னர் ஐக்கிய அரபுக்குடியரசு நிராகரித்திருந்தது. ஆனால் இப்பொழுது அரபுக்குடியரசின் மனம் மாறியிருப்பதற்கான காரணம் தெரியவில்லை.

அமெரிக்காவில் அரபுக் குடியரசுப் பிரதிநிதியாகவிருக்கும் திரு. முகம்மது ஹஸன் எல்சய்யத் இதுபற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்க யோசனைகளில் சில ஏற்றுக்கொள்ளமுடியாதவையும் இருந்தபோதிலும் வல்லரசுகள் நடத்தும் பேச்சுக்களில் இது திருத்தப்படலாமென்று அவர் கூறினார்.

# இயற்கைபுனிதம் கெடுகிறது இளவரசர் பிலிப் கவலை

லண்டன், பெப் 11

பூமியின் இயற்கைச் சூழ்நிலை மனிதனால் மாசுபடிந்து புனிதம் கெட்டு வருவதாக எலிசபெத் மகாராணியின் கணவரான இளவரசர் பிலிப் கவலை தெரிவித்தார். ஐரோப்பிய இயற்கை வள பாதுகாப்பு மகாநாட்டில் உரைநிகழ்த்திய அவர் மனிதனின் இயற்கைச் சுற்றுடலை பாதுகாப்பதற்கு உலக நாடுகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வற்புறுத்தினார்.

'கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட மாபெரும் புரட்சியால் எண்ணற்ற தொழிற்சாலைகள் இயந்திர கூடங்கள் உருப்பெற்றுள்ளன. இவை ஆகாயத்தையும் நீர்நிலைகளையும் அசுத்தமாக்கி வருகின்றன' என்று இளவரசர் குறிப்பிட்டார்.

350 பிரதிநிதிகள்வரை பங்குபற்றிய மகாநாட்டில் உரைநிகழ்த்திய அவர், "எமது இயற்கைச் சூழல் இவ்வகையில் பாதிக்கப்பட்டு வருவதை நாம் உணரத்தவறி விட்டோம். ஆகையால்தான் இன்று இதுவொரு ஆபத்தான பிரச்னையாகிவிட்டது" என்றார் எமது இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கு எத்தகைய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுதான் இந்த மகாநாட்டைமட்டுமன்றி, ஐரோப்பாவையும், அகில உலகையும் எதிர்நோக்கும் பிரச்னையாகும் என்று அவர் எடுத்துரைத்தார்.

இளவரசர் தொடர்ந்து பேசுகையில், ஆகாயமும் நீரும், நிலமும் மாசுபடுவதை தடுப்பதற்கு ஒவ்வொரு நாடும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

சம்பவம் வலியுறுத்துவதாக டெல் அவிலில் ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.

## பனிமலை சரிந்து 40 பேர் பலி

ரோம், பெப். 11

பிரான்சில் பனிமலை இடிந்து விழுந்ததால் 40 பேர் பலியாகினர் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஒரு வீட்டின்மேல் பனிமலை விழுந்ததால் 200 க்கும் அதிகமானோர் பனியினால் மூடப்பட்டனர். இதுவரை 60 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மீட்பு வேலைகள் நடைபெறுகின்றன. இறந்தவர்களில் பலர் பள்ளிமாணவர்களாம்.

## கொள்ளைக் கோஷ்டிக்கு இருவர் பலி

புதுடில்லி, பெப். 10

கேரளத்தில் கொள்ளைக் கோஷ்டியொன்று ஒரு வீட்டினுள் புகுந்து பெருந் தொகையான பணத்தை கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

30 பேர் கொண்ட இக் கோஷ்டி வீட்டிலிருந்த இருவரைச் சுட்டுவிட்டு கொள்ளையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் இன்று காலை நடைபெற்றது.

## சிரமதான மூலம் மடம் அமைப்பர்

மண்டைதீவு, புதன்

மண்டைதீவு மதிஒளி சனசமூகநிலையத்தினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மண்டைதீவு சுடலையில் தங்குமடமொன்றைக் கட்டமுன்வந்துள்ளனர். இதுபற்றிய தீர்மானம் அண்மையில் திரு. ந. வரதன் தலைமையில் நடைபெற்ற நிலையத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சுடலையில் இதுவரை ஒரு மடமுமில்லாததால் மக்கள் பெரிதும் அவதியுற்றனர்.

பொலிசார் இந்த கொலை சம்பந்தமாக வெங்கடேசவரலு, நரசிங்கராவ், சென்னி மற்றும் 4 பேர்களை கைது ... ஆயுள் தண்டனை விதித்தனர்.

மற்ற 4 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

# தகுதி முறையில் அர்ச்சகர் வேலை

## குன்றக்குடி ஆதரவு

விழுப்புரம், பெப்.11

தகுதி அடிப்படையில் அர்ச்சகர் வேலை கொடுப்பதற்கு குன்றக்குடி அடிகளார் ஆதரவு தெரிவித்துள்ளார்.

தென் ஆற்காடு மாவட்ட அருள்நெறி மன்ற மாநாடு விழுப்புரத்தில் நடைபெற்றது. மாநாட்டுக்கு குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் பேசுகையில் கூறியதாவது:-

கோயில்கள் நடைபெறுவதை மதத்துத் தலைவர்கள் முடிவுசெய்யலாமல் நாட்டின் முதல் அமைச்சர் (கருணாநிதி) முடிவு செய்யாமா என்று சிலர் கேட்கிறார்கள்.

அதில் தலையிட வேண்டிய பிரச்னை எழுந்து சூழ்நிலை காரணமாக தலையிட்டு இருக்கிறார் என்று நான் கூறுகிறேன்.

1952-ல் உடைக்க வேண்டும்என்றவர்கள் (திராவிடக் கழகத்தினர்) 1969-ல் பூச்சு வேலை செய்ய முன்வந்து இருக்கிறார்கள்.

அதாவது கோவில் கர்ப்பகிரகத்துக்குள் நுழையவேண்டும் என்று போராட்டம் தொடங்கினார்கள்.

முதல் அமைச்சர் தலையிட்டால் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கடவுள் தமிழ் கேட்கின்ற காலம் அதாவது திருமறை அர்ச்சனைவந்துள்ளது.

தமிழக அரசு மதுரையில் கண்ணப்ப நாயனார் பெயரால் ஆஸ்பத்திரி ஏற்படுத்த முன்வந்துள்ளது.

இதற்கென ரூ.2 லட்சம் மக்கள்வசூலித்து கொடுத்து அரசு ஒப்புதல் அளித்து ரூ.6 லட்சம் மேலும் முதலீடு செய்து கட்டுகிறார்கள்.

இதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:

தமிழக கோவில்களில் அர்ச்சகர்களை நியமிக்க, அதற்கென பயிற்சி- சாதி வேறுபாடு இல்லாமல் தகுதி உடையவர்களை நியமிக்க முன்வந்த தமிழக அரசு முதல்-அமைச்சருக்கும், அரசுக்கும் பாராட்டு தெரிவித்து, வரவேற்கிறது.

கோவில்களில் அர்ச்சகர்களை நியமிப்பதில் தகுதி உள்ளவர்களை நியமிப் தகுதியுள்ளவர்களை பதை வரவேற்பதோடு, அந்தக் கொள்கையை வரவேற்கும் பணியில் மக்கள் தானே மலரிட்டு, கடவுளை வழிபடும் உரிமையும், அடையத்தக்க முயற்சியையும் செய்ய, தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

அர்ச்சகர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி, படிப்பை ஒப்படைக்க தமிழக அரசை மாநாடு கேட்டுக் கொள்கிறது.

எமிலுக்கு

## நீதிபதியின் எச்சரிக்கை

லண்டன், பெப். 11

"நீர் கேள்விகளுக்கு பதில் அளித்தால் சற்று இரக்கம் காட்டுவேன். இன்றேல் மிகவும் கடுமையான முறையில் விஷயத்தைக் கையாள்வேன்"

பணமுடை சம்பந்தமாக கமிஷன் முன் சாட்சியம் அளிக்கவும் சத்தியம் செய்யவும் இலங்கையரான எமில் மறுத்ததால் நீதிமன்றத்தில் நீதிபதி அவரை இவ்வாறு எச்சரித்தார்.

சுகவீனம் காரணமாக தம்மால் ஆஜராக முடியாதெனவும், வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள பண வசதியில்லையெனவும் எமில் சவுந்தரநாயகம் தெரிவித்தார்

நீதிமன்றத்துக்கு வந்து கேள்விக்குப் பதிலளிக்க அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டது.

இன்சூரன்ஸ் கம்பெனி மோசடி சம்பந்தமாக எமிலுக்கு கடந்த ஆண்டு 8 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சென்னை, பெப் 11

பத்மஸ்ரீ பட்டம் பெற்ற நடிகர் ஜெமினி கணேசனுக்கு சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது. தென்னிந்திய சினிமாத் தொழில் நுட்ப கலைஞர்கள் சங்கம் இந்த விழாவை நடத்தியது. இவ் விழாவுக்குத் தலைமை வகித்த அகில இந்திய சினிமா அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. சுந்தர்லால் நகாதா தமது தலைமையுரையில், "தென்னகத்தில் தயாரிக்கப்படும் திரைப் படங்கள், இந்தியாவின் பிற பகுதிகளில் தயாரிக்கப் படும் படங்களைவிட எந்த வகையிலும் குறைந்தவையல்ல. அந்தந்தமாநிலப்பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் படங்களாக இங்கு தயாரிக்கப் படுகின்றன. இதற்கு 'தில்லானா மோகனாம்பாள்', 'துலாபாரம்' ஆகியன சான்று பகரும் எனக் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், "சினிமா மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும்பொழுது போக்கு சாதனம் மட்டுமல்ல, மக்களின் மனதை பக்குவப் படுத்தும் சாதனமும் ஆகும், எந்த கலைஞன் கலையை அலட்சியப்படுத்துகிறானோ அவனை கலை தூக்கி எறிந்து விடும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றும் கூறினார்.

நடிகர் என் டி ராமராவ், சிறந்த நடிகையாக தேர்ந்து எடுக்கப்பட்ட சாரதா, ரேலங்கி, இசை அமைப்பாளர் கண்டசாலா, டைரக்டர் ஏ. வின்சென்ட் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து உரையாற்றினர்.

## சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், வியா

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்த புதுமுறிப்பு கோணவில் வீதியும், குளக்கட்டும் உருத்திரபுரம் காந்திஜி சேவா சங்கச் சிறுவர்களாலும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமககளாலும் சிரமதானம் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

கடந்த 5-ந் திகதி ஆரம்பமாகி 6-ந் திகதி முடிவுற்ற இவ்வேலைகளில் காந்திஜி சேவாசங்க அதிபர் திரு. வேலாயுத பிள்ளையும், மதுரையிலிருந்து இலங்கைக்கு விஜயஞ்செய்த பாரத சர்வோதய இயக்கப் பணியாளர் திரு. இராஜனும் கலந்துகொண்டார்.

பலாப்பழம், சாராயம் முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்காட்சியில் பல நாடுகளின் வர்த்தகபொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது

## இலங்கைப் பிரதிநிதிகள்

கோட்டை, புதன்

இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கை இந்திய பல்கலைக் கழக சபையின் 10-வது மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளாக சிங்கள பேராசிரியர் டாக்டர் எம். பி. ஆரியபாலா, கொழும்பு பல்கலைக்கழக இணைக்காரியதரிசி திரு. கே. இராஜேந்திரா ஆகிய இருவரும் கலந்துகொள்கிறார்கள். இச் சபையில் இரு நாடுகளையும் சேர்ந்த 70 பல்கலைக்கழகங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன.

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

கோட்டை, புதன்

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. ஜனவரியில் 46 பேர் வீதிவிபத்தில் உயிரிழந்ததாகவும் இது 1969 ம் ஆண்டுஜனவரி மாதத்தில் சம்பவித்த விபத்திலும்பார்க்க இவ்வாண்டு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் வீதிவிபத்தி சிக்கி 7 பேர் மரணமாகியுள்ளனர். அதே நேரத்தில் வீதிவிபத்தில் காயமடைந்த 200 பேர் தினமும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் படுகிறார்கள் என நேற்று முன்தினம் பொலிஸ்பகுதியைச்சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 'மீண்டும் வேலை வழங்குவோம்'

தெரணியகலை, புதன்

அடுத்தஜூன் மாதம்கூட்டாட்சிகட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக சகல அரசியல் நியமனங்களையும் ரத்துச் செய்து அரசியல் காரணமாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்வர்களுக்கு வேலை வழங்குவதோடு நஷ்டஈடும் வழங்குவோம்

தல்துவ என்ற இடத்தில் நடந்த கூட்டாட்சிகளின் பிரசாரக்கூட்டத்தில் சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர் என் எம் பெரேரா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதை தானும் தனது சகாக்களும் ஆவலுடன் எதிர் பார்ப்பதாக முடிவு பபாகனேவ்தெரிவித்தார். அயல்நாட்டு மதகுருவானவர்களை சோவியத் யூனியனுக்கு விஜயம்செய்யுமாறு தான் அழைக்கப் போவதாக அவர் சொன்னார்.

எங்கள் நாட்டில் இவர்கள் தங்கியிருப்பது சோவியத் முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை நமது அதிதிகள் நேரில் கண்டறிய உதவும். ஏனைய பிரஜைகளுடன் முஸ்லிம் மக்கள் பூரண சமுத்துவ உரிமைகளை அனுபவிப்பதை அவர்கள் காண்பார்கள் என்றார் பபாகனேவ். மக்களுக்கு சமாதானமும் சந்துஷ்டியும் ஏற்படவும் யுத்தங்கள் ஒழியவும் நாம் அல்லாஃவை பிரார்த்திக்கிறோம் என்றார்.

ஜெரூஸலத்திலுள்ள அல்-அக்ஸா பள்ளிவாசல் உலக முஸ்லிம்களின் மூன்றுவது முக்கியத்துவமிக்க ஸ்தலம் எனக்கருதப்படுகிறது. இந்த பள்ளிவாசலுக்கு முஸ்லிம்கள் மீண்டும் தொழுகை நடத்தச் செல்லும் நாள் விரைவில் வரும் என நாம் நம்புகிறோம். என்று பபாகனேவ் சொன்னார்.

## கலை விழாவும் இசை மகாநாடும்

அல்லைப்பிட்டி, புதன்

அகில இலங்கை இசையாசிரியர் சங்கத்தினரால் வருடாவருடம் நடாத்தப்பட்டு வரும் கலைப்பெருவிழாவும் இசை மகாநாடும் எதிர் வரும் மார்ச்மாதப் பிற்பகுதியில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில்மேற்படி கல்லூரி கலைக்கழகத்தினரின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கிறது.

## "வடக்கு கிழக்கில் அடக்கக்கூடாது"

அல்லைப்பிட்டி, புதன்

"இலங்கையிலுள்ள தமிழர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் அடங்கிக் கிடப்பதற்கு வழிகோலுவது ஒரு கேவலமான செயலாகும் தமிழர்களுக்கு இலங்கை நாடு சொந்தமானது. எனவே அவர்களுக்கு இலங்கை முழுவதிலும்வாழுவதற்கு பூரண சுதந்திரம் வேண்டும்."

மேற்கண்டவாறு வழக்கறிஞர் திரு. ரி. சிவஞானம் வேலணை தெற்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
என்னைப்பொறுத்தமட்டில் சமயமின்றி அரசியலில்லை. சமயம் அரசியலுக்குத் துணைபுரிகிறது.
— மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu N. tional Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 1-ந் திகதி (12-2-70)

## உத்தியோக மொழி இலாகா

உத்தியோக மொழி இலாகாவை நிதிஅமைச்சிலிருந்து பிரதம மந்திரி தமது பொறுப்பில் ஏற்றிருக்கிறார். இது பலவிதத்திலும் வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கையென்றே நாம் கருதுகிறோம். இந்த நாட்டு மக்கள் அனைவருமே இதை வரவேற்பார்கள் என்பது நமது நம்பிக்கை.

உத்தியோகமொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் பதினான்கு ஆண்டுகளாகின்றன. சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் உத்தியோக மொழியாக 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அதைச் சரியானமுறையில் முழுமையாக அமுல்நடத்தமுடியாதென்பதை அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ் டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவே நன்குணர்ந்து 1958-ம் ஆண்டில் தமிழ்மொழி (விசேஷ) உபயோகச்சட்டம் ஒன்றையும் கொண்டுவந்து நிறைவேற்றினார். ஆனாலும் கூட சிங்களமட்டும் சட்டமும் சரி தமிழ்மொழி உபயோக (விசேஷ) சட்டமும் சரி, சரியானமுறையில் நாட்டுமக்கள் அனைவருக்கும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் அமுல்செய்யப்படவில்லை. சிங்கள மக்களும் தமிழ் மொழி பேசும் மக்களும் இந்த மொழிச்சட்டங்கள் அமுல்நடத்தப்படும் முறை குறித்து அதிருப்தி தெரிவித்து வந்துள்ளனர். அந்நிய ஆட்சியினர் தமது மொழியை இந்த நாட்டு மக்களின் தொண்டைக்குள் திணித்ததைவிட இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினர் இந்த நாட்டின் சிறுபான்மையினரின் தொண்டைக்குள் தங்கள் மொழியை வலுக்கட்டாயமாகத் திணிக்கமுயல்வதாகவே சிறுபான்மையினர் கருதினர். தங்கள் மொழியை அழிக்க முனைவதன் மூலம் தங்கள் இனத்தையே அழிக்கமுனைவதாக [illegible]

வில்லை. அவரின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் தேசியஅரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் அவப்பெயரை உண்டாக்கவும் அரசாங்க சேவையிலுள்ள சிலரே முனைந்துநின்றனர். அரசாங்கத்தின் கொள்கைகளையும் உத்தரவுகளையும் செயல்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையுமுள்ள அரசாங்க ஊழியரே அரசாங்கம் கொண்டுவந்த தமிழ்மொழிச்சட்ட விசேஷ விதிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டமும் வேலைநிறுத்தமும் செய்தது இதற்குச் சான்று.

இந்தச் சம்பவங்களை பிரதமர் நன்குணர்ந்துகொண்டார் என்பது உத்தியோக மொழி இலாகாவைத் தாமே தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டதிலிருந்து தெளிவாகிறது. துணிவுடன் அவர் செயலாற்றினால் பிரதமர் நல்லவர் மட்டுமல்ல வல்லவர் என்பதையும் நாடு உணரும்.

## 'பட்டதாரிகள் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடவேண்டும்'

பாணந்துறை, புதன்

'இன்று நாட்டில் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி அலைந்துகொண்டிருக்கிறார்கள். குடிசைக்கைத்தொழில்களில் இவர்களுக்குப் பயிற்சியளித்தால் இவர்கள் நாட்டுக்கும் தங்களுக்கும் நன்மைபயக்கத்தக்க வேலைவாய்ப்பை அடைவார்கள்'

பொல்கொடையில் கொட்டகொடை ஐக்கிய கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நிறுவப்பட்ட நூல்நிலையமொன்றையும், தையல் நிலையத்தையும் திறந்துவைத்துப் பேசுகையில் களுத்துறை மாவட்ட கிராம அபிவிருத்தி. குடிசைக்கைத்தொழில் உதவி அதிபர் திருமதி எச். அபேரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## நமது நூலகங்களில்

# இலங்கை பற்றிய தரமான நூல்கள் பெருகவேண்டும்

**உள்ளூராட்சி வாரத்தையொட்டி இன்று நூலக தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இதையொட்டி சேர். பொன். இராமநாதன் கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியின் நூலகவியல் விரிவுரையாளர் திரு. வே இ பாக்கியநாதன் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

**— வே. இ. பாக்கியநாதன் —**
(பி. எம். எஸ். இன். எவ். எஸ்.)

உள்ளூராட்சி அமைச்சர் பிரேமதாசா அவர்களின் பெருந்தன்மையோடு நூலகங்களின் பயனை உணர்ந்து உள்ளூராட்சி வாரத்தில் 12-ம் திகதியை நூலகங்கட்கெனப் பிரத்தியோகமாக ஒதுக்கியுள்ளார். இத்தினத்தில் இலங்கையின் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்கள் யாவும், நூலாக அபிவிருத்திக்கெனத் தம்மாலான முயற்சிகளைச் செய்ய உத்தேசித்துள்ளனர். இது முற்றிலும் பூரண மனத்துடன் வரவேற்க வேண்டியது ஒன்று. இதுகாலவரையிலும் இப்படிப் பரவலான முயற்சி எந்த ஒரு அரசாங்கத்தினாலும், மந்திரியினாலும் எடுக்கப்படவில்லை. ஆகவே இது நூலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

புயலுக்குப்பின் அமைதி என்பது போன்று விழாக்கள் எடுத்ததும் அவற்றை எக்குறிக்கோளோடு நாம் எடுத்தோம் என்பதை மறந்து விடுவதுதான் மனித இயல்பு வருடத்துக்கு ஒருமுறை வந்து போகும் தீபாவலிதைப்பொங்கல் போன்ற அத்தினங்களில் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க, உவகை ஏற்பட கொண்டாடிவிட்டு அடுத்து அவை பற்றி மறந்து விடுவது போலன்றி உள்ளூராட்சி வாரத்தில் முக்கியமாக நூலகத்தினத்தில் சில சங்கற்பங்களை நாம் செய்து அவற்றை நடைமுறையில் செயல்பட முயல்வது, முயற்சிப்பது அவற்றிற்கு அத்திவாரமிடுவது நலம்.

சேர். பொன் இராமநாதன், சிவபாதசுந்தரனார், சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர் அவர்கள் எமக்கு ஆற்றிய சேவைகளை நாம் வானளவாகப் புகழ்கிறோம், வாயார வாழ்த்துகிறோம். இது வாய்ப்பேச்சில் மட்டும்தான். செயலில் வரும்பொழுது ஒரு சிலரின் சுயமுயற்சியினால் ஏதோ ஆக்க பூர்வமான விடயங்கள்நடைபெறுவதை நாம் கண்ணூடாகக் காண்கிறோம். இவர்களும் மற்றும் பேரறிஞர்களும் எமக்காற்

காப்பது தம் தலையாய பூர்த்தி செய்வதுடன், பிற்கடன் என்று மேலைத் தேசத்தினர் எண்ணியிருக்கும் இவ்வேளையில் நம்மவர் அவற்றைக் கறையானுக்கிரையாக்குகின்றனர். நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்திலே நாவலரைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடியாது இங்கிலாந்துக்குச் செல்ல வேண்டிய நிலை எற்பட்டுள்ளது என்றால் நாம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பது தெட்டென விளங்கும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றியும், அதனது பூர்வீக வரலாறு பற்றியும் ஓர் உள்நாட்டினரோ அல்லது வெளிநாட்டினரோ அறிய வேண்டுமெனில் அல்லது அவைபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமெனில் யாழ்ப்பாணத்தில் எங்காவது முடியுமா என வினவினால் யாழ்ப்பாணக் கல்லூரியில் இருக்கும் நூலகத்தின் சேர்க்கையைக் கொண்டு ஓரளவு முடியும் எனக் கூறலாம். அதுதவிர வேறு இடமொன்று யாழ்ப்பாணத்தில் கூறுவது கடினம். இப்படியான சூழ்நிலை ஏன் நிலவுகிறது என எவராவது சிந்தித்தார்களா? தேவையானவர்கள் தேடிக் கண்டுபிடிக்கட்டுமே என்ற மனப்பான்மையினால் இந்த இழிவுநிலை ஏற்பட்டுள்ளது. எமது பிரதேசத்தைப்பற்றி எம்மவர்க்கே அக்கறையில்லையென்பதை மேலைத்தேசத்தினர் அறியவரின் எவ்வளவு கல்வி மேம்பாட்டில் நாம் உயர்ந்திருப்பினும் கண்ணிருந்தும் குருடர்களாய் [illegible] தாய்க் கண்கலங்குவர். [illegible] சம் சம்பந்தமான விடயங்

காலச் சந்ததியினரும் நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு வழிவகுத்தது போலாகும். வைத்திருக்கும் புத்தகச் சேர்க்கைகளைப் பணமாக்க முடியாது யாம் பெற்ற இன்பம் இவ் வையகமும்பெறட்டும்என்ற பெருநோக்கோடு நம் எழுத்தாளப் பெருமக்கள் எண்ணின் சாத்தியப்படக்கூடிய விடயமாகும்.

### இலங்கை நூல்கள்

இத்துடன் உள்ளூராட்சி மன்றங்கள் தமது நூல்கங்களில் இலங்கை சம்பந்தமான நூல்களைத் தொடர்ந்து வேண்டுவதற்கான வழிவகைகளைவகுக்க வேண்டும். அதைத் தொடர்ந்து அமுல் நடத்தத் தெண்டிக்கவேண்டும் கூடுமாயின் இதை ஒரு நியதியாக்கினால் ஆட்சி மன்றத் தலைவர்கள் மாறினாலும், இக்கொள்கை மாறாது செயல்படத் சாத்தியமாகும் இதனால் காலப்போக்கில் சிறுதுளி பெருவெள்ளம் என்பது போன்று நூலகங்களில் இலங்கை சம்பந்தமான தரமான நூல்கள்சேரும் பெருகும். இது ஒன்றையாவது உள்ளூராட்சி வாரம் உள்ளூராட்சி மன்றத்தினரின் உள்ளத்தில் வலியுறுத்துமாயின் உண்மையாக இவ் வாரம் ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது என்ற மனச்சாந்தி ஏற்படும்.

# வட பகுதியில் பஸ் சேவை மோசமாகி வருகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில்சேவையிலீடுபடும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர் என்று தென் யாழ்ப்பாணம்பிரயாணிகள் சங்க தலைவர் திரு. எம். எஸ். நாதன் தெரிவித்தார்.

வட பகுதியில் பஸ் சேவை மிகவும் மோசமாக வருவதாகவும் பல தடவை இதுபற்றி மேலதிகாரிகளுக்கு புகார் செய்தும் பஸ்சேவை சீரடையவில்லையென்றும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: பாடசாலை சேவை பஸ்கள் நேரஅட்டவணைப்படி செல்லாமல் தாமதித்துச் செல்வதால் மாணவர்கள் சாதாரண பஸ்களில் பிரயாணம் செய்கின்றனர் இதனால் மற்றும் பிரயாணிகள் செல்ல முடியாமலிருக்கிறது.

சிலபாடசாலைச் சேவை பஸ்கள் பழுதடைந்தால் வேறு சேவை விடப்படுவதில்லை. இதனால் பிரயாணிகளே பாதிக்கப்படுகின்றனர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பிரயாணிகள் சிலதினங்கள் மணிக்கணக்காகக் காத்துநின்றும் கஷ்டப்படுகிறார்கள். மேலதிகாரிகள் விரைவில் இக்குறைகளைத் தீர்த்துவைக்கவேண்டும்.

0 0 0

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு கடன் வழங்கும் திட்டம்

[illegible] கோட்டை, புதன்

[illegible] வேலையற்ற பட்டதாரிகள் வர்த்தகம் கைத்தொழில் துறைகளில் தாங்களாக ஈடு [illegible]

வேலைவாய்ப்பளிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது நாட்டில்வேலையற்ற 500,000பேரில் பட்ட [illegible]

## ஐயாறன் எழுதுவது..

அவசியம் காரணமாக தமிழகத்துக்குச் செல்ல நேரிட்டது. இரண்டு வாரகாலம் அங்கு சென்று திரும்பினேன். வயோதிப அன்னைக்கு உடல் நலம் சரியில்லை. விமானத்தில் செல்லுவதென்றால் கட்டணம் மிக அதிகம். இலங்கையரானதால் கப்பல் வழி செல்ல முடியாதாம். அன்னைக்கு உடல்நலம் சரியில்லை என்று அத்தாட்சிக்கடிதம் காட்டியபின் காருண்ய 'அதிகாரி' கப்பலில் செல்ல 'பர்மிட்' வழங்கினார்.

இந்தியராயின் தலைமன்னார்—ராமேஸ்வரம் வழியாக யாத்திரை செல்லலாம். இலங்கையராயின் அது கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இலங்கையருக்கு மாறாக இலங்கை அரசாங்கமே ஏன் இவ்வித அநியாயத் தடையைப் போட வேண்டும்? ஏன் இந்த வேற்றுமை. இதை எதிர்த்து நீதிமன்றத்தில் ஏன் ஒருவரும் இதுவரை வழக்குத் தொடரவில்லை? அதற்குச் செலவும் முயற்சியும் அதிகந் தேவை என்றுதான் யாரும் இந்த அநியாயத்தை நீக்க முன்வரவில்லைப் போலும். அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு ஸ்தாபனம் இலங்கையில் அவசரம் தேவை. அப்படி ஒன்று இருப்பின், இவ்வித அநீத சட்டங்களை எதிர்த்து, வாதாடி இங்கு மக்களுக்கு அதிகாரவர்க்கத்தின் ஏதேச்சாதிகார உத்தரவுகளால் தீங்குகள் ஏற்படாமலும் உரிமைகள் பறிபோகாமலும் தடுக்கலாம். பொது நல உணர்ச்சியுள்ள யாரும் முன்வந்து இதைச் செய்வார்களா?

பார்லிமெண்டிலேஇதைப் பற்றிப் பேசி இந்தத் தடையை நீக்க முற்படக் கூடாதா? என்று தொண்டமான் அவர்களைக் கேட்டேன். பல தடவை இதைப் பற்றிக் கேட்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்றும் இன்னும் முயற்சி செய்து வருவதாகவும் தெரிவித்தார். இது எப்படியாயினும் தாயாருக்கு உடல் நலம் சரியில்லை என்று அத்தாட்சிக் கடிதம் காட்டியதும், கப்பலில் செல்ல காருண்ய அதிகாரி 'பர்மிட்' அளித்தார். அந்தமட்டில் நன்றி தெரிவித்துவிட்டு கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு ஒரு நாள் முன்னதாகவே ரயில் ஏறினேன்.

கிழமையில் இரு நாட்கள் தான் கப்பல். அன்று ரயிலில் கூட்டம் தாங்காது. முதல் நாளே ரயில் ஏறி, திருக்கேதீச்சரத்தில் தங்கி தரிசனம் செய்து விட்டு, பிறகு தலைமன்னாரில் மறு நாள் வசதியாக கப்பலில் செல்லலாமென்று புறப்பட்டேன். கொழும்புக் கோட்டை ஸ்டேஷனில் ஓர் அன்பர் எச்சரிக்கை செய்தார். ரயிலில் கூட்டம் அதிகமிராததால் மகோவிலிருந்து மதவாச்சிக்கு அப்பால்வரை திருடர் பயம் அதிகமென்றும் சற்றே கண் அயர்ந்தால் பெட்டியை 'அபேஸ்' செய்து விடுவார்களென்றும் விழித்திருந்தாலும் தாக்கி பெட்டியைப் பறித்து ரயிலிலிருந்து ஓடிவிடுவரென்றும் சொன்னார். தினசரி அந்த ரயிலில் இவ்வித திருட்டுகள் நடப்பதாக வேறு சிலரும் கூறக் கேட்டேன். மனதுக்கு சற்றும் நிம்மதியில்லை. என்னுடன் மற்றும் ஒருவர்தான் இருந்தார். என் பெட்டியிலே அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் பாஸ்போர்ட் போய்விட்டால் என்ன செய்வது?

யாரோ இருவர் ரயிலில் வந்து ஏறினர். அவர்களது பார்வை என் சந்தேகத்தை அதிகரித்தது. இரவு முழுவதும் தூக்கமில்லை! ஒருவிதமாகத் தலைமன்னாருக்கு அதிகாலை வந்து சேர்ந்தேன். இலங்கை ரயிலில் பிரயாணம் செய்வது அதிக சுகமானது என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆனால் ஒருபக்கம் திருடர் பயம். கக்கூஸ் அசுத்தம். ஜன்னல் கதவுகளைத் திறக்க முடியவில்லை. மின்விசிறிகள் பலகளவு போய்விட்டன. சீனம் நமக்கு அளித்த முதல்நம்பர் ரயில் பெட்டிகளில் இன்று பலவும் களவுபோய் அலங்கோலமாகவுள்ள நிலைமையைப் பார்க்கையில் நாம் பெருமை கொள்ள முடியாது. சீனர்களும் இதைக் கண்டால் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள். இவற்றை சீர்திருத்த ரயில்வே நிர்வாகம் அவ்வப்போது ஏதும் செய்ய முடியாதா?

0 0 0

முன்னம் நான் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவே சிறுபான்மையினர் கருதினர். தங்கள் மொழியை அழிக்க முனைவதன் மூலம் தங்கள் இனத்தையே அழிக்கமுனைவதாக அவர்கள் அச்சமும் ஐயமும் அடைந்தனர். சில அரசியல் வாதிகளின் ''ஒரு மொழி ஓர் இனம்'' என்ற பேச்சு இதற்கு ஆதாரமாக அமைந்தது.

என்றாலும் திரு. டட்லி சேனநாயகா 1965-ம் ஆண்டில் இந் நாட்டில் வாழும் சகல இன, மத மக்களையும் கொண்ட தேசிய அரசாங்கத்தை அமைத்த போது, இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் அச்சமும் ஐயமும் ஓரளவு நீங்கியதுடன் தங்களது தனித்துவம் நிலைபெறுமென்ற நம்பிக்கையும் அவர்களுக்கு ஏற்பட்டது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த அடுத்த வருடமே தமிழ்மொழிச் சட்டத்துக்கு (விசேஷ) விதிகளை சில அரசியல்கட்சிகளின் எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் பொருட்படுத்தாமல் நிறைவேற்றியது சிறுபான்மையினருக்கு குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் நம்பிக்கையளித்தது. ஆனாலும் சிங்களச்சட்டத்தை தீவிரமாக அமுல்நடத்துவதிலும் தமிழ்மொழிச்சட்ட [விசேஷ] விதிகளை அமுல் செய்வதற்கு இடையூறு செய்வதிலுமே அரசாங்க இலாகாக்கள் ஈடுபட்டுவந்திருக்கின்றனவென்பது தெளிவு. தேசியஐக்கியத்தை நிலைநாட்டுவதில் பிரதமர் எடுத்துவரும் முயற்சிக்கு இடையூறு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சிலர் அரசாங்கசேவையில் தொடர்ந்து இருந்து வருவதாலோ என்னவோ பிரதமரின் நோக்கம் நிறைவேற்றப்பட

கிராம அபிவிருத்தி. குடிசைக்கைத்தொழில் உதவி அதிபர் திருமதி எச். அபேரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கிராமப்புறங்களில் இத்தகைய தையல் நிலையங்கள் நிறுவப்படுவதால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் குறைந்த செலவோடு தையல் தொழிலைப்பயின்று அதன் மூலம் தங்கள் குடும்பத்திற்கு வருவாயைத் தேடிக்கொள்கிறார்கள் கிராமியப் பெண்களுக்கு இத்தகைய நிலையங்களினால் ஏற்படும் நன்மையை உணர்ந்து சமீபகாலத்தில் அரசாங்கமும் கிராமப்புறங்களில் நெசவு, தையல்நிலையங்களை நிறுவி வருகிறது' எனக் குறிப்பிட்டார்.

## இம்மாதம் திறக்கப்படும்

உரும்பராய், புதன்

உரும்பராய்கரந்தன் பகுதி கலைவாணி நூல் நிலையம் இம்மாதம் 14-ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது திரு. வி. ஆர். ஆனந்தவேல் இதனைத் திறந்துவைப்பார். கண்ணன்கோஷ்டியின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## அங்குரார்ப் பணம்

வல்வெட்டித்துறை, புதன்

தமிழர் சுயாட்சிக் கிளை அங்குரார்ப் பணமும், பொதுக்கூட்டமும் இம்மாதம் 18ந் திகதி வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை இப்பகுதி வாலிபர் செய்துவருகிறார்கள்.


பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு விசேஷ காட்சிகள்
ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால் தொடர்ந்து
காட்சியளிக்கும்

ஔவையார்
வின்ஸரில்

தினசரி 4 காட்சிகள்



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


ஏதோ ஆக்க பூர்வமான விடயங்கள்நடைபெறுவதை நாம் கண்ணூடாகக் காண்கிறோம். இவர்களும் மற்றும் பேரறிஞர்களும் எமக்காற்றிய தொண்டுகள் பற்றிய விடயங்கள் விபரங்கள் அவரவர் காலங்களில் வாழ்ந்தவர்களுக்கன்றிப் பிறருக்குத் தெரியுமோ என்றால் இல்லை என்று ஆணித்தரமாகப் பதில் கூறலாம். காரணம் என்னவெனில் அவர்களின் எழுத்துக்களைப் பேணிப் பாதுகாத்து வைக்க நாம் மறப்பதே. தற்போதாதையர் விட்டுச் சென்ற செல்வமாகிய எழுத்துப் படைப்புக்களை கண்போலப் பாது

மேம்பாட்டில் நாம் உயர்ந்திருப்பினும் கண்ணிருந்தும் குருடர்களாய் இருப்பதாய்க் கணக்கிடுவர். பிரதேசம் சம்பந்தமான விடயங்கள் இல்லையென்றால் அது மன்னிக்கக்கூடிய விடயம். அவற்றை நாம் சாமிநாதையர் போன்று தேடிக்கண்டு பிடிக்காது இருப்பது தான் மாபெருங்குற்றம். தனிப்பட்டவர்கள் சிலரது வீட்டு நூலகச் சேர்க்கைகளில் தேடக்கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள் உள்ளன. அவற்றை ஒன்று சேர்த்து நூற்பட்டியலாக நாம் தயாரித்து வைப்பின் நம்மவர்களினுடைய தேவைகளைப்

## கந்தபுராண வாரத்தை பலரும் கொண்டாடுக

[கந்தபுராண வாரத்தையொட்டி நாவலர்பெருமான் கந்தபுராண சபைத் தலைவர் திரு. வை. இராமநாத முதலியார் விடுத்த செய்தி:]

'எத்துணைக்காலந் திருப்பித்திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாதுதித்தித்து அமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணம்' என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் திருவாக்காகும்.

நமது யாழ்ப்பாணத்தில் பழையகாலத்திலேகந்தபுராணம் ஆலயம் தோறும் பேணிப் பூசிக்கப்பட்டுவந்தது. கந்தபுராணத்தைத் திருமுறை வரிசையிலும், கச்சியப்பப் பெருமானைக்குரவர்கள் வரிசையிலும் வைத்துப்போற்றுவது ஆன்றோராசாரமாகும். அதனாலே மனநிறைவு ஆகிய செல்வம் அக்காலத்தில் பெருக்கெடுத்திருந்ததென்பதைஇக்காலத்தார் சிந்திக்கவேண்டும்.

விலங்கு நிலையில் இருக்கும் மனிதனை மனிதனுக்கு மனிதர்களுக்கு மேலே, தேவர்களுக்கும் அப்பாலே வழிநடப்பதற்கும் வழிசெய்வது கந்தப்புராணமாகும்.

கந்தபுராணம் ஒருகற்பகதரு. அது வேண்டுவார் வேண்டுவதை எந்தக்காலத்திலும் ஈவதற்கு ஆயத்தமாயிருக்கின்றது.

இந்நாட்டிற்கு வந்த- வருகின்ற இடையூறுகளினின்றும் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வைத்தது வைக்கின்றதுகந்தபுராணம், இவ்வாறு கந்தபுராண போதனை போதிக்கின்றது.

இப்பேர்ப்பட்ட பெருமை படைத்த நூலைப் படிப்பவர் தொகை இக்காலத்தில் குறைந்துவருவதும் நாட்டில் தீய சக்திகளின் கை ஓங்கி வருவதும்கவலைக்குரிம்விஷயமாகும். இந்நூலுக்கு அதன் உரிய இடத்தை மீண்டும் கொடுப்பதே எமது சபையின் பிரதான நோக்கமாகும். கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்பசிவாசாரியாரது குருபூசையைக் கொண்டாடுவதன் மூலம் கந்தபுராணத்தினது பெருமையை மக்களிடையே பிரசாரம் செய்து 'கந்தபுராணத்தைவிதிப்படி மெய்யன்போடு நியமமாகக்கேட்பவர்கள் நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசயம்முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இதுசத்தியம்; சத்தியம்; முக்காலும்சத்தியம்' என்ற அரும்பெரும் உண்மையை மக்கள் ஒவ்வொருவரும்உணரும்படி செய்தலை தலையாய கடனாக இருக்கின்றது.

கந்தபுராண வாரத்தை பல இடங்களிலும் கொண்டாடுவதன் மூலம் இக்குறிக்கோள் ஓரளவு நிறைவேறும் என எதிர்பார்க்கின்றோம். இனிவரும் காலங்களில் பெரிய அளவில் பிரசாரம் செய்ய எண்ணியுள்ளோம்.

எங்களது வேண்டுகோளுக்கிணங்கி எங்களது நோக்கங்களை மக்களுக்கு எடுத்துரைத்து கந்தப்புராணத்தின் அருமை பெருமைகளை அடுத்தியம்பும் பல்வேறு சபைகள் இயக்கங்கள், மன்றங்கள், ஆலயங்கள், மடங்கள், ஸ்தாபனங்களுக்கும் நாம் மிகவும் நன்றியுடையோம்.

கோட்டை, புதன்

வேலையற்ற பட்டதாரிகள் வர்த்தகம் கைத்தொழில் துறைகளில் தாங்களாக ஈடுபடுவதற்கு மக்கள் வங்கி தற்போது நிறுவப்பட்டுள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்பு செயலகத்தோடு ஒத்துழைத்து கடன்வசதியளிக்கத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதாகத் தெரிகிறது.

மேற்படி செயலகத்தின் அதிபர் திரு. பி. எல்கடுவ தனிப்பட்ட ஒவ்வொருபட்டதாரிக்கும்இக்கடனை வழங்காது அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கே கடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அவர்மேலும் இதுசம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கையில் பட்டதாரிகளின் சங்கங்களுக்கு கடன் வழங்குவதால் அச்சங்கங்கள் தனிநபர் பெறுவதிலும் பார்க்க அதிகதொகையைக் கடனாகப் பெறலாம். பெற்றுபிரயோசன தொழில்களில் ஈடுபடலாம். கொடுக்கப்படும் இக்கடனின் அதிக கூடியளவு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

கொழும்பு 117ம் இலக்க விஜேராம மாவத்தையில் உள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்பு செயலகம் தற்போது வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் விபரங்களைச் சேகரித்து வருகிறது. அரசாங்க தனியார்துறை ஸ்தாபனங்களோடு கலந்தாலோசித்து இரு துறைகளிலும் இயலுமான அளவு பட்டதாரிகளுக்கு விரைவில் வேலைவாய்ப்பளிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது நாட்டில்வேலையற்ற 500,000பேரில் பட்டதாரிகள் தொகை 10,000லிருந்து 14,000 ஆக உயர்ந்துள்ளதாக பொருளாதார திட்டஅமைச்சு தெரிவித்துள்ளது. (சி பிஏ)

## 17 தொழில்நுட்ப ஊழியர் இந்தியா பயணம்

கோட்டை, புதன்

17 தொழில் நுட்பவியளாளர்கள் பயிற்சி பெறுவதற்காக நேற்று முன்தினம் இந்தியா பயணமாகியுள்ளனர்.

தொழில் நுட்ப கூட்டுஸ்தாபனத்திட்டத்தின் கீழ் செல்லும் இவர்கள் அங்கு பயிற்சி பெறும் ஒன்றரை வருட காலப்பகுதிக்குள் உர உற்பத்தியந்திர சாதனங்கள் பற்றியும் அவற்றைக் கையாளும் முறை பற்றியும் பயிற்சி பெறுவார்கள்.

இலங்கை உர உற்பத்திக் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த இப்பயிற்சியாளர்கள் இந்தியாவில் சிந்திரி பிஹார் உர உற்பத்தி கூட்டுஸ் தாபனங்களில் பயிற்சி பெறுவார்கள்

## ''பாமரருக்கு ஆற்றும் பணி''

முசலி, புதன்

''மக்களிடத்தில் அறிவைப் பெருக்கவும், வாசிக்கும் திறனை வளர்க்கவும், நூல் நிலையங்கள் அமைக்கப்படவேண்டியதும், விஸ்தரிக்கப்படவேண்டியதும் அவசியம். இந்த நல்ல நோக்கத்தைக் கொண்டு உள்ளூராட்சி வார விழாவில் நூல்நிலைய விஸ்தரிப்பு வேலையைத் தொடங்கியது பாமர மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் இட்டுச் செல்லும் ஒரு நல்ல பணியாகும்'' என்று நானாட்டான் மேற்கு கிராமசபை நூல்நிலையத் திறப்புவிழாவின்போது வண. பிதா. செ. ஆ மைக்கல்சாமி கூறினார்.

நானாட்டான் மேற்கு கிராமசபையினால் கொண்டாடப்பட்ட உள்ளூராட்சி வாரத்தையொட்டி கிராம சபை நூல்நிலையத்தில் இவ்விழா நடைபெற்றது.

மற்றும் நானாட்டான் மேற்கு கிராமசபைத் தலைவர் திரு. சூசைப்பிள்ளை இம்மனுவேற்பிள்ளை, பண்டிதர் நீ. சி. முருகேசு, திரு. ம. சற்குணம் ஆகியோரும் உரையாற்றினர். வைபவத்திற்கு முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம் தலைமைவகித்தார்.

## வாகன வசதியில்லை

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப்படை முகாமில், போதியளவு வாகன வசதியில்லாததனால் வீரர்கள் வேலைமுடிந்தபின்பு முகாமிற்கு நடந்துவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம். முன்பு கடமையில் ஈடுபட்டிருந்த வாகனங்கள் சில பழுதடைந்து போயிருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இக்கஷ்டம் பற்றி முகாம் பொறுப்பதிகாரிக்கு வீரர்கள் புகார் செய்துள்ளனராம்.

யதும், கப்பலில் செல்ல காருண்ய அதிகாரி 'பர்மிட்' அளித்தார். அந்தமட்

## கந்தபுராண வார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

நாவலர் பெருமான் கந்தபுராண சபையினரால் நடாத்தப்படும்தந்தபுராண வார நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

12-2-70 வியாழன் காலை நல்லூரில் வழிபாடு, நாவலர் பெருமான் திருவுருவத்திற்கு வணக்கம்.

13-2-70 மாலை வண்ணைச் சிவன் கோவிலில் வழிபாடு, புத்தக சாலைகளிலும் கல்வி நிலையங்களிலும், கந்தபுராண நூல் விற்பனவைச் சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் ஆரம்பித்து வைத்தல்.

14-2:70 காலை 8-15 மணிக்கு இலங்கை வானொலியில் பண்டிதர் இரா. இவசுப்பிரமணியம் பேச்சு) வண்ணை நாவலர் மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நூற்காட்சியைச் சைவபரிபாலன சபைக் காரியதரிசி திரு. ஆ. தனபாலசிங்கம் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தல்.

15-2-70 முககிய முருக தலங்களில் சபையின் சார்பிற் பூசை: நாவலர் மண்டபத்தில் சைவ பரிபாலன சபையின் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் குருபூசை நிகழ்ச்சிகள். பத்திரிகைக் காட்சி.

15-2-70 பி.ப 5 மணிக்குக் கந்தபுராணபடனப் பயிற்சி நிலையத்தை சைவப் புலவர் மணி த குமாரசுவாமிப்புலவர் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தல்.

17-2-70 நாவலர் மண்டபத்தில் பி.ப 5 மணிக்கு முதலியார் செ முத்துத்தம்பி தலைமையில் கந்தபுராண நூற்பதிப்பு ஆய்வு அரங்கம். திரு. க. சிவராமலிங்கம், திரு தேவன் முதலியோர் பங்குபற்றுவர்.

18-2-70 பிற்பகல் 5 மணிக்கு நாவலர் மண்டபத்தில் கவிஞர் கந்தவனம் தலைமையில் கந்தபுராணக் கவிதாஞ்சலி: வாழ்த்துச் செய்திகள்.

நாடோறும் மாலை 6 மணிக்கு நாவலர் மண்டபத்தில் கந்தபுராண பாராயணமும் கந்தபுராணச் சொற்பொழிவுத் தொடரும் தலைவர் திரு. வை. இரகுநாதமுதலியார் தலைமையில் நடைபெறும்.

ரியலேவே நானாகும் அவவட போது ஏதும் செய்ய முடியாதா?

0 0 0

முன்னம் நான் செய்த பாவம் முதலறப் பின்னர் நான் பெரிதும் அருள்பெற்றதும் அன்னமார் வயற்கோளம்பத்துள்ளமர் பின்னல் வார் சடையானைப் பிதற்றியே.

— அப்பர் அடிகள்

## வரவேற்பு உபசாரம்

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப்படை முகாமிற்கு களஞ்சிய உதவிப் பொறுப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுவந்துள்ள வீரர் செ, பாலசுப்பிரமணியத்திற்கு விஸ்வமடு ஐந்தாம் இல்ல வீரர்களினால் வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது. இந்தவரவேற்பு உபசாரக்கூட்டத்திற்கு முகாமின் சகல பிரதம உத்தியோகத்தர்களும் மற்றும் வீரர்கள் எல்லோரும் வந்திருந்தனர். திரு. கே. கணபதிப்பிள்ளையின் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

## யாழ்ப்பாணத்தில் நிறுவப்படு

கோட்டை, புதன்

இலங்கை குடும்பத்திட்டச் சங்கம் தனது முதலாவது கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவத்தீர்மானித்துள்ளது. இக்கிளை மார்ச் மாதம் 18ம் திகதி திறக்கப்படவிருக்கிறது.

## கந்தப்புராண வாரத்தைமுன்னிட்டு கந்தனுக்கு அர்ச்சனை

நாளை 12-2-70 தொடக்கம் 18-2-70 வரை நடைபெறும் இந்தக் கந்தப்புராண வாரத்தை முன்னிட்டு கச்சியப்பர்திருநாளில் வருகிற ஞாயிறு கந்தபுராணசபைச் சார்பில் முருகன்கோயில்களில் அர்ச்சனை வழிபாடுநடைபெறும். தெற்கே கதிர்காமத்திலும் கிழக்கே மண்டூர்க் கந்தசுவாமி கோயிலிலும் வடக்கே செல்வச்சந்நிதியிலும் மேற்கே கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலும் மத்திய இலங்கையிற் பேராதனைச் சர்வகலாசாலை முருகன்கோயிலிலும்நாளைக் காலை நல்லூர்க்கந்தசுவாமி கோயிலிலும் அர்ச்சனைவழிபாடு நடைபெறவிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org